# ஓட்டத்தை முடிக்கும்படி ஒரு வேண்டுகோள் (2 தீமோத்தேயு 4)

*"நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோ. 4:5).*

பவுலைப் போல நியமத்தை அமைக்கின்ற ஒருவர் (1 கொரி. 11:1) தன் வாழ்வானது நித்தியத்திற்கு முடுக்கி விடப்படுகிற ஒரு உச்சநிலைக்கு வந்துள்ளதை அறிகிற பொழுது, ஒவ்வொரு சொற்றொடரையும் வல்லமையினால் வலிவூட்டுவதே அவரது விருப்பமாய் இருக்கும். பவுல் இந்தக் கடிதத்தின் முடிவுரைக்கு வந்தபோது, நிச்சயமாகவே அவருக்கு ஒரு விசேஷமான பொறுப்பு இருந்தது.

அதிகாரம் 4, ஒரு கட்டளையுடன் தொடங்குகின்றது, பவுல் அந்தக் கட்டளைக்கு அநேக காரணங்களைக் கொடுத்தார் (4:1-8). தமது பிரியும் காலம் அண்மையில் இருந்ததினால் உயர்ந்து செல்லும் உணர்வுகளுடன் அவர் தமக்குப் பிரியமான தீமோத்தேயு தம்முடன் இருப்பதைப் பெரிதும் விரும்பினார் (4:9-13). இருப்பினும், சிலுவையின் இந்தப் பழைய போர்ச் சேவகரின் ஊக்கமான விசுவாசம் வெற்றி கொண்டு எஞ்சி நின்றது. பவுல், தனது உறுதியான நம்பிக்கை இந்தத் துன்பம் மிக்க வேளையிலும்கூட உயர்ந்திருந்தது என்று தீமோத்தேயு அறிய வேண்டும் என ஏங்கினார். இங்கு பவுல் எப்பொழுதும் இருக்கும் எதிர்ப்புக்கு மத்தியில் வெற்றியின் மிகத் தனிச் சிறந்த சொல் விளக்கங்களில் ஒன்றைக் கொடுத்தார் (4:18). அதிகாரம் 4ல் உள்ள தனிச்சிறப்பு வாய்ந்த முடிவு விளக்கங்களில் தீமோத்தேயுவை ஆழமாய்த் தொட்டிருக்க வேண்டிய ஆளுமைத்தன்மைகளும் வேண்டுகோள்களும் அடங்கியுள்ளன (4:19-22).

## பாடம் 10: கடைப்பிடிக்க ஒரு கட்டளை (4:1-8)

பவுல் தமது "கட்டளையை" வெளியிடுகையில், அவர் அப்பொழுது தான் தீமோத்தேயுவுக்குக் காண்பித்திருந்த விஷயமான, கடைசி நாட்களில்

மனிதர்கள் தவறும் தோல்வியுமான ஓட்டத்தை நாடுவார்கள் (3:1-9) என்ற எதிர்மறை கண்ணோக்கில் இருந்து அதை வெளியிட்டார். நேர்மறை கண்ணோக்கிலிருந்து பவுல், தீமோத்தேயு "எந்த நற்கிரியையும்" செய்யத் தகுதியுள்ளவராக்கப்பட்டிருந்ததாக (3:10-17) குறிப்பிட்டார்.

தீமோத்தேயுவுக்குப் பவுல், ''நான் ... உனக்குக் கட்டளை யிடுகிறதாவது" (4:1) என்று கூறியதன் மூலம் இதைத் தொடங்கினார். பின்பு பவுல் தொடர்ந்து வரும் வார்த்தைகளைக் குறித்து தாம் எவ்வளவு பயபக்தியும் உண்மையும் கொண்டிருந்தார் என்பதைத் தீமோத்தேயுவின் மனதில் ஆழப்பதிப்பதற்காக சொற்றொடர்களையும் தெய்வீக ஆளுமைத் தன்மைகளையும் தேர்வு செய்தார். சுவிசேஷ ஊழியரே, நீங்கள் எப்பொழு தாவது கவனிப்பீர்கள் என்றால், அது இப்பொழுதாக இருக்கட்டும்!

## கட்டளையின் தன்மை (வ. 1)

பவுல் தனது கட்டளையின் தகுந்த நிலையை தெய்வீக நபர்த் துவத்தையும் முதன்மைகளையும் பயன்படுத்தி விவரித்தார். முதலாவது, கட்டளையானது சர்வ வல்லவரான யெகோவா வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராய் இருக்கின்ற "தேவனுடைய பிரசன்னத்தில்'' ஏற்படுத்தப் பட்டது (4:1). தேவனுடைய பிரசன்னத்தில் உள்ள எந்த செய்தியும் மெய்மறந்த கவனத்துடன் கேட்கப்பட வேண்டியதாயிருக்கிறது, கூட்டுறவு அக்கறையுடன் அளக்கப்படுகிறது, நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப் பட வேண்டிய இடத்தில் கீழ்ப்படியப்பட வேண்டியதாக உள்ளது, மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட ஊக்கத்துடன் பகிர்ந்து கொள்ளப் பட வேண்டியதாக உள்ளது என்பதைத் தீமோத்தேயு அறிந்திருந்தார்.

இருப்பினும், பவுலின் கட்டளையானது "கிறிஸ்து இயேசு"வையும் உள்ளடக்கியிருந்தது. அவரது பாராட்டுரைகள் மரியாதைக்குரியவை களாயும் இருந்தன. வசனம் 1ன் சந்தர்ப்பப் பொருளில், இவர் மூன்று தருணங்கள் அல்லது நிகழ்வுகளுடன் தொடர்பு படுத்தப்படுகிறார்:

1. உச்சகட்டத் தருணம் - கிறிஸ்து "வாழ்வோரையும் இறந்தோரையும் நியாயத்தீர்க்க வேண்டியவராக" இருக்கிறார். அது அவரது உரிமையாக உள்ளது, அவர் அதைச் செய்வதற்குரிய கருவிகளைக் கொண்டுள்ளார் (யோவா. 12:48; எபி. 4:12, 13; வெளி. 2:12; 3:14; 20:11-15).

2. சிறைப்பிடிக்கும் கெம்பீரம் - கிறிஸ்து பிரசன்னமாவார். பவுல், ''ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்'' (1 தெச. 4:16, 17) என்று எழுதினார்.

"பிரசன்னம்"[1] என்பதற்கான கிரேக்கச் சொற்றொடரின் தனிச்சிறப்புக் குறித்து வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு கவனித்துள்ளார்:

எந்த இடத்திலும் பேரரசரின் தரிசனம் (*epiphaneia*) அவரது பிரசன்னமாக இருந்தது. பேரரசர் எந்த இடத்தையாவது பார்வையிட இருக்கும் பொழுது (அங்கு) ஒவ்வொரு விஷயமும் முழுமையாக ஒழுங்காய் அமைக்கப்பட்டன என்பது தெளிவு. தெருக்கள் கூட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டன; எல்லா வேலைகளும் அன்றைய தினம் வரை ஒழுங்காக்கப்பட்டன. பேரரசரின் வருகைக்கு நகரானது தகுதிப்பட்டிருக்கும்படி தூய்மைப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப் பட்டது; எனவே பவுல் தீமோத்தேயுவிடம் பின்வருமாறு கூறுகின் றார்: "பேரரசரின் வருகையை எதிர்பார்க்கும் எந்த ஒரு நகரிலும் என்ன நடக்கும் என்று நீ அறிந்துள்ளாய்; நீ கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய். அவர் எப்பொழுது பிரசன்ன மானாலும் எல்லாம் தயாராக இருக்கும்படி நீ உன் ஊழியத்தைச் செய்." கிறிஸ்தவர் எந்த நேரத்திலும் கிறிஸ்துவின் வருகைக்குத் தயாராயிருக்கும்படி தன் வாழ்வை ஒழுங்கமைக்கின்றார்.[2]

*3. உன்னத சந்திப்பு* - கிறிஸ்து "தமது பிரசன்னம் மற்றும் தமது இராஜ்யம் ஆகியவற்றால்" எல்லாரும் அறியும்படி ஆவார். இவ்விடத்தில் "அவருடைய இராஜ்யம்" என்ற சொல்விளக்கத்தின் உட்செருகலானது அவருடைய பிரசன்னத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும் உறவுபடுத்தப்பட வேண்டும். ஆல்ஃபிரட் மார்ஷல் அவர்கள் தமது இணைவரி மொழி பெயர்ப்பில் நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பின்வரும் சொற்றொடராக்கத் தைப் பயன்படுத்தினார்: உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் "நியாயந்தீர்க்கப் போகிறவராய் இருக்கிற[ஒரு]வர்" (Gk.: *toumellomtos krinein*).[3]

கிரேக்க வசனப் பகுதியை மார்ஷல் அவர்கள் தக்க முறையிலேயே மொழிபெயர்த்தார், ஆனால் நாம் இதனை வரிசை முறைக்கு மாறாக நாள் வரிசை முறையில் நினைத்துப் பார்த்தால் இது நமக்கு ஒரு பிரச்சனை யாகின்றது. நாள் வரிசை முறையில் இயேசு இன்னமும் பிரசன்னமாகி யிருக்கவோ அல்லது உயிரோடிருப்பவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்த்திருக்கவோ இல்லை. ஆகையால், "நியாயந்தீர்க்கப்போகிற" என்பது எந்தக் கருத்தில் பொருந்துகிறது? இது வரிசை முறைக்குப் பொருந்துகின்றது. எபிரெயர் 9:27ல், "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும்" என்று கூறப்படுகிறது. இவ்வார்த்தைகளை எபிரெயருக்கு அதன் எழுத்தாளர் எழுதின பின்பு, கோடிக்கணக்கானவர் கள் இறந்து போயுள்ளனர் ஆனால் நியாயத்தீர்ப்பு இன்னும் வந்திருக்க வில்லை என்பதை நாம் யாவரும் புரிந்துணர்கின்றோம்! நாள் வரிசை அமைப்பில் இது குழப்பமூட்டுவதாய் இருக்கும்; ஆனால் வரிசைப்படியான கூற்றின் எடுத்துரைப்பில் இது ஒரு கருத்தை ஏற்படுத்துகின்றது. மரணத்திற்கு அடுத்த நிகழ்ச்சியாக உள்ளது நியாயத்தீர்ப்பு ஆகும்.

கிறிஸ்துவின் மறுவருகையும் இதே போன்றுள்ளது. அவர் பிரசன்ன மாகும் பொழுது அது நியாயந்தீர்ப்பதற்காகவும் (எபி. 10:30; 1 பேது. 4:17; வெளி. 20:11-15) இராஜ்யத்தைப் பெற்று சபையை அவருக்கு முன்பாக நிறுத்திக் கொள்வதற்கும் (எபே. 5:15-27; 1 தெச. 2:12; 4:16-18), மற்றும் அந்த ஆத்துமாக்களை (அந்த இராஜ்யத்தை) பிதாவிடம் ஒப்புக்

கொடுப்பதற்குமானதாக இருக்கும். 1 கொரிந்தியர் 15:24-28ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> *அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.*

இவ்வசனங்கள், இராஜ்யம் இன்னும் இங்கு (வந்து) இருப்பதில்லை என்று கூறும் சிலருடைய தவறான கருத்தைத் தெளிவாக்குகிறது!

இயேசு பிரசன்னமாகும் பொழுது, இராஜ்யத்தில் இருக்கும் நாம் அவரை முகமுகமாய்த் தரிசிக்கும் மகிமையுள்ள அந்தக் கனத்தைப் பெறும் பொழுது, தேவனுடைய மேன்மைமிக்க திட்டம் "முடிவுக்கு வரும்" என்று பவுல் எழுதினார். அந்த சாதகமான வாய்ப்பிலிருந்து - தேவன், கிறிஸ்துவின் நிலைப்பாடு, மற்றும் அவரது பிரசன்னத்தின் வேளை, நியாயத்தீர்ப்பு ஆகியவற்றின் வாய்ப்பிலிருந்து - பவுல் தீமோத்தேயுவுக்குப் பின்வருமாறு கட்டளையிட்டார்:

> *சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் … காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று (4:2-5).*

## கட்டளையில் உள்ள திட்டமும் செயல்முறையும் (வ. 2)

இந்தக் கட்டளையின் திட்டமானது சிந்தனையைத் தூண்டக் கூடியதாக உள்ளது. செய்தியானது தெளிவாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. சுவிசேஷ ஊழியர், "வசனத்தைப் பிரசங்கிக்க"[4] வேண்டும். வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டியதன் அவசியத்தை அதிகமாய் வலியுறுத்துதல் இயலாத செயலாக உள்ளது. பவுல், "எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே

விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1 கொரி. 1:21) என்று கூறினார்.

தீமோத்தேயு, ''சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும்,'' வசனத்தைப் பிரசங்கிக்கத் (4:2) தயாராக[5] இருக்க வேண்டியது அவசியமாயிற்று. சுவிசேஷ ஊழியரின் பகுதியில் உண்மையில்லாத, பொறுப்பில்லாத ஆவியெதுவும் இங்கு பொருந்துவதில்லை.

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்" என்ற சொல் விளக்கம், விவசாயத் தொடர்புள்ள ஒரு சொற்றொடராக உள்ளது. தட்பவெப்ப சூழ்நிலைகள் நடவுக்காலம் மற்றும் அறுவடை ஆகியவற்றின் மீது வரையறைகளை இடுகின்றன. வசனத்தைப் பிரசங்கிப்பதற்கு (இவ்விதமான) பருவ கால வரையறை எதுவும் இருப்பதில்லை என்று பவுல் வலியுறுத்தினார். தீமோத்தேயு ஒவ்வொரு கணமும் "தயாராக இருந்து" சத்தியத்தை அறிவிப்பதில் வலியுறுத்தத்துடன் ஊக்கத்துடனும் செயல்பட வேண்டும்.

வசனத்தைப் பிரசங்கிக்கும் முறைமையானது அணுகுமுறைகளில் பல வகையையும் தேவனுடைய செய்தியில் தொலைவில் சென்றடையும் செல்வாக்கையும் காண்பிக்கின்றது.

"கடிந்து கொள்ளுதல்"[6] இந்தப் பிரசங்கித்தல் ஒருவரைத் திருத்துவதற்கானதாக உள்ளது. இதன் கொள்கைகள் நிரூபிக்கப்பட்ட சத்தியங்களாக உள்ளன. இது ஒருவரின் ஓட்டத்தைத் திருத்துவதற்கான வழிமுறையாக உள்ளது (1 பேது. 1:6, 7; ரோமர் 3:4ஐக் காணவும்).

"கண்டனம் பண்ணுதல்"[7] இந்தப் பிரசங்கித்தல் எச்சரிப்பதற்கானதாக உள்ளது. "கடிந்து கொள்ளுதல்" என்பது நாம் மேற்கொள்ளத் தேவையான ஓட்டத்தைச் செயல்விளக்கப்படுத்த அல்லது அறிவிக்கின்றதாக இருக்கையில் ''கண்டனம் பண்ணுதல்'' என்பது தேவைப்பட்டால் தண்டனை என்பதை மறைமுகமாய்க் குறிப்பிடும்.

"புத்தி சொல்லு"[8] இந்தப் பிரசங்கித்தல் நம்மைச் சரியான திசைக்கு இழுப்பதற்கான வேண்டுகோள்களை அளிக்கின்றது. இந்த அழகிய, விசாலமான சொற்றொடரானது பல்வேறு தேவைகளைச் சந்திக்க சாத்தியமான பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. கவனித்து கேட்பவர்களில் ஒருவர் ஒரு வேண்டுகோளைப் பெறலாம், இன்னொருவருக்கு ஊக்கப்படுத்துதல் தேவைப்படலாம், மற்றும் இன்னொருவருக்கு உபதேசித்தல் தேவைப்படலாம். சுவிசேஷமானது தனது பரந்த அளவிலான புத்தி கூறுதல்களினால் எல்லாருடைய தேவைகளையும் சந்திக்க வல்லதாக உள்ளது.

"எல்லா நீடிய சாந்தத்தோடும்." பிரசங்கித்தல் என்பது ஊழியத்தில் சாந்தமுள்ள ஆவியுடன் கலக்கப்பட வேண்டியதாக உள்ளது. "எல்லா நீடிய சாந்தத்தோடும்" கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லும்படி பவுல் கூறினார். ஆகையால், பிரசங்கியார் சகிப்புத் தன்மையுடனும் நீடிய சாந்தத்துடனும் பிரசங்கிக்க வேண்டியவராய் இருக்கிறார்.

''உபதேசம்.'' பிரசங்கித்தலானது உபதேசத்தின் மூலமாகத் தெளிவாக்கப்பட்டு நம்பவைக்கப்படுகிறது. இது ஒருவர் போதிக்கும்

கலையில் தகுதிப்பட வேண்டும் என்ற கருத்தை மட்டுமின்றி, அவர் போதிக்கையில் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கவனித்துப் பின்பற்ற வேண்டும் என்பதையும் உள்ளடக்குகின்றது!

*எந்த ஒரு சுவிசேஷ ஊழியரும் தம்மை குறிப்பிட்ட கால இடை வெளியில் ஆய்வு செய்கிற பொழுது, நன்கு பணியாற்றுவார். அவர் தமது பிரசங்கித்தலானது இந்தப் பகுதிகள் யாவற்றையும் உள்ளடக்குவதையும் தாம் ஒரு பொறுமையுள்ள ஆவியை வெளிப்படுத்துவதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்!*

## கட்டளையைக் குறித்த பிரச்சனை (வ. 3, 4)

வசனத்தைத் தொடர்ந்து/நிலையாகப் பிரசங்கிக்க வேண்டும் என்பது தீமோத்தேயுவுக்குக் கட்டளையாய் இருந்தது. மக்கள் இனியும் சத்தியத்தை விரும்பாமல், போதகர்கள் மக்களுக்கு அவர்கள் கேட்க விரும்புகின்ற எதையும் கூறுவதால் அவர்களுக்கு மனப் பூர்வமாய் இணங்கி செல்வார்கள் என்பதைப் பவுல் முன் கண்டார்.

பவுலின் எச்சரிக்கைகளை ஆய்வு செய்தலானது, முரட்டாட்டமுள்ள இந்த ஆத்துமாக்களின் பின்வரும் பண்புகளை வெளியாக்குகின்றது:

அவர்கள் சத்தியத்தை விட்டு விலகுகின்றனர்: "... அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க[9] மனதின்றி இருப்பார்கள்." இங்கு (பவுல் வசனம் 2ல் வேண்டிக் கேட்டுக் கொண்டபடி) ஆரோக்கிய மான உபதேசம் மனிதர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது, ஆனால் அவர்கள் அதன் திருத்துகிற வற்புறுத்துதல்களை ஏற்றுக் கொள்வதோ அல்லது ஆரோக்கியமான உபதேசத்திற்காக நிலை நிற்பவர்களுக்கு வருகிற சோதனைகளைச் சகித்துக் கொள்வதோ முடியாமல் அல்லது அவர்களால் செய்யப்படாமல் போகும் (மத். 13:21; 2 தீமோ. 3:10-13ஐக் காணவும்).

பிரிந்து செல்லுதலின் அளவைக் கவனியுங்கள்: "... அவர்கள் ... போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு."[10] ரோனால்டு வார்டு அவர்கள் பின்வருமாறு கவனித்துள்ளார்:

> அவர்கள் "திரளாகச் சேர்த்துக் கொள்வார்கள்" என்பது அவர்களின் தணிக்க இயலாத பசியையும் புதுமைகளின் மீது முன்விருப்பம் கொண்டுள்ள நிலையையும் ஆலோசனை தெரிவிக்கிற உண்மையாக உள்ளது. எதுவும் அவர்களைத் திருப்திப்படுத்துவதில்லை, அவர்கள் "அடுத்த மனிதரை" கேட்டுக் கவனிக்க எப்பொழுதும் வளைகின்றனர். தங்களுக்கு என்பது அவர்கள் முற்றான சுயநலத்தை மறைமுகமாய் உணர்த்துகின்றது. அவர்கள் தாங்கள் விரும்புகிறது என்ன என்று அறிந்திருந்து, அதை அடையும் நோக்கம் கொண்டிருந்தனர். எல்லா போதகர்களும் தகுதியானவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் சுய விருப்பங்களுக்குத் தகுதியான மனிதர்களாய் இருக்க வேண்டும். போதகர்கள் சபைக்குழுமத்திற்குப் பொருத்தமானவராயிருக் கின்றனர்.[11]

இன்றைய நாட்களில் பல சபைக்குழுமங்களில் உள்ள பொதுவான போக்குடன் ஒப்பிடும் பொழுது, இது எச்சரிக்கை செய்யும் சூழ்நிலையாக உள்ளது. ஊழியர்கள் "இசை நாற்காலிகள்"[12] விளையாட்டுப் போன்று (அதிகாரத்தைக் கைப்பற்றுவதில்) ஈடுபட்டுள்ளவர்களாகவும், சகோதரர்கள் ஊழியர்களைப் பற்றி முறுமுறுப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். நாவு தவறிப் போய் எதையாவது கூறுதல் அல்லது ஒரு குறிப்பிட்ட பாவத்திற் கெதிரான உறுதியான நிலைப்பாடு என்பது சபைக்குழுமம் ஒரு புதிய ஊழியரைத் தேடுவதற்கான காரணமாகி விடலாம். இந்த ஓட்டத்தைப் பின்பற்றுகிற உறுப்பினர்கள் ஊழியர்களை ஏற்படுத்துவதில்லை - அவர்களை நகர்த்த மட்டுமே செய்கின்றனர்! - உபதேசமல்ல பணமே (அல்லது பணத்தைக் குறைத்தலே) பிரசங்கிக்கப்படுவது என்ன என்பதைத் தீர்மானிக்கலாம்!

பிரசங்கியார் எஜமானருடைய செய்தியிலிருந்து புறந்திரும்பி தாம் பேசுவதைக் கேட்கிற "வியாதியும் சுயநலமும் உள்ள ஆத்துமாக்களை" திருப்திப்படுத்தும் எந்தக் கூற்றையும் உரைப்பது என்பது இந்தக் காட்சியின் மறுபுறமாக உள்ளது. அது அவரது பணிப் பாதுகாப்பிற்கான அவரது திட்டமாகின்றது!

ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு ஊழியரும் இந்த இரட்டைப் பாவத்தினால் பாதிக்கப்பட்டுவிடாதபடிக்கு, பவுலின் எச்சரிக்கையைக் கவனிக்க வேண்டும்!

"செவித்தினவுள்ள"[13] உறுப்பினர்களைப் பற்றிப் பவுல் கூறினார். மனித வேண்டுகோள்களைக் கட்டி எழுப்பும் விருப்பம் என்பது இந்தத் தவறுக்கான அஸ்திபாரமாக உள்ளது, இது "எனக்கு விருப்பமான வகையில்" சத்தியத்தை விளக்கியுரைக்கிறது, மற்றும் பிறகு "என் காது கேட்க விரும்பும் வகையில்" அதைக் கூறும் போதகர்களை (சம்பளத்திற்கு அமர்த்த) நாடுகிறது. வாழ்வு மாற்றத்தை அல்ல - ஆனால் சுயமகிமையை மட்டுமே இவ்வகையான போதனை கேட்டுக் கொள்கிறது.

இந்த விருப்பங்கள், சுயத்தை நாடும் ஆத்துமாக்கள் சத்தியத்தை "விட்டு விலகிச்"[14] செல்லக் காரணமாகின்றது (4:4). சத்தியத்தைக் கைவிட்ட பிறகு, இந்த ஆத்துமாக்கள் "கட்டுக் கதைகளுக்கு"[15] "திரும்பும்படி"[16] சாய்கின்றனர். இங்கு நடு மையமான தளம் என்று எதுவும் இருப்பதில்லை. மனிதர்கள் கட்டுக் கதைகளிடம் செல்கின்ற பொழுது, அவர்கள் எஜமானரின் செய்தியை விட்டு விடுகின்றனர்.

## கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஆலோசனைக் குறிப்பு (வ. 5)

பலர் பிற அழைப்புக்களை கேட்டு, தவறான விருப்பங்களை வளர்த்து, சத்தியத்தை விட்டு விலகியிருக்கையில், தீமோத்தேயு மேற்கொள்ள வேண்டிய ஓட்டத்தைப் பவுல் குறிப்பிட்டார். மீண்டும் பவுல் தனது புத்திமதிகளில் கட்டளைகளை உட்சுமத்தினார்! அவர் தீமோத்தேயுவுக்குப் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்:

*‘‘(எல்லாவற்றிலும்) மனத் தெளிவுள்ளவனாயிரு’’*[17] இங்கு பவுல் பயன்படுத்திய கிரேக்க வார்த்தையின் எல்லாக் கருத்துக்களையும் இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளடக்குவதாக இருப்பதில்லை (4:5). *Nephe* என்பது அமைதியாகவும், சீராகவும், முழுமையும் சுய கட்டுப்பாட்டு டனும் நன்கு சமானமான நிலையிலும் உள்ள ஒருவரை விவரிக்கிறது. ஒரு வார்த்தையில் எவ்வளவு அறைகூவல் மிக்க பண்புகளின் குழுவொன்று உள்ளது! மொழிபெயர்ப்பாளர்கள் இதனை “எல்லாவற்றிலும்” என்பதுடன் தொடர்புபடுத்தியதில் வியப்பெதுவும் இல்லை.

*“தீங்கநுபவி.”*[18] ஒவ்வொருவரும் தன்னை விரும்ப வேண்டும் என்றும், ஒவ்வொன்றும் தன் விருப்பப்படி நடைபெற வேண்டும் என்றும் எதிர் பார்க்கின்ற சுவிசேஷ ஊழியர் மிகவும் எளிய(கருத்துள்ள)வராக இருப்பது மட்டுமின்றி சோதனைக் காலம் வரும் என்ற பவுலின் இந்த எச்சரிக்கையைப் புறக்கணிப்பவராகவும் இருக்கின்றார். ஒரு சுவிசேஷ ஊழியரின் ஆவியானது தேவைப்பட்டால் அவர் தீங்கநுபவிக்கக் கூடியவராகும்படி அவரைப் பலப்படுத்த வேண்டும்.

*“சுவிசேஷகனுடைய வேலையைச் செய்.”*[19] அதுவே தீமோத்தேயுவும், ஒவ்வொரு சுவிசேஷகரும் ‘‘செய்யும்படி’’ பவுல் கட்டளையிட்ட ‘‘வேலையாக’’ (Gk.: *poieson*) உள்ளது. இந்தச் சொற்றொடரானது விசேஷமாக ஒருவரின் நடைமுறை, செயல்பாடு அல்லது உற்பத்திச் செயல் திறனை எடுத்துரைக்கின்றது. பிரசங்கியார் தனது ஊழியத்தில் அக்கறை கொண்டு அதை நிறைவேற்றவும் ஒரே நோக்கத்தைப் பின்பற்றவும் (1 தீமோ. 2:4; 4:16; 2 தீமோ. 2:2; தீத்து 1:5) கூடியவராக வேண்டும். அவர் சுவிசேஷ ஊழியரின் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதிப்பாடும், ஊக்கமும், பழக்கமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

தேவனால் வடிவமைக்கப்பட்ட பணிப் பொறுப்பு பற்றி ரோனால்டு வார்டு அவர்கள் பின்வருமாறு கவனித்துள்ளார்:

> பரத்துக்கேறிய கர்த்தர் தம்முடைய சபைக்கு சுவிசேஷ ஊழியர் களையும் போதகர்களையும் கொடுத்தார். கண்டிப்பாய்/திட்ட வட்டமாய்க் கூறுவதென்றால், அவர்கள் சபையினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட வேலையாட்களாயிராமல், கிறிஸ்துவின் அன்பளிப்பு களாக உள்ளனர். போதகர் கிறிஸ்துவின் போதனையை அல்லது உபதேசத்தைப் போதிக்கின்றார்; *சுவிசேஷ ஊழியர்* மனிதர்கள் பெற்று விசுவாசிக்கும்படி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்றார். தீமோத்தேயு இதைச் செய்ய வேண்டியவராய் இருந்தார் (இ.வ. எபே. 4:11) ... சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பது *வேலையாக* உள்ளது. இது, ஊழியர் வெறுமனே ‘‘பேசுகிறார்’’ என்று கேவலமாய்க் கூறுபவர்களின் வாயை அடைக்க வேண்டும். இயேசுவின் செய்கைகள் என்பவை செயல்பாட்டில் இருந்த வார்த்தைகளாக (அவை ஒரு செய்தியைக் கொண்டிருந்தன) மற்றும் அவரது வார்த்தைகள் செய்கைகளின் செயல்விளைவுகளைக் கொண்டிருந்தவைகளாக இருந்ததைப் போலவே, *சுவிசேஷ ஊழியரின்* வார்த்தைகளும் மகா வல்லமையைக் கொண்டுள்ளன (இ.வ. 1 தெச. 1:5) மற்றும் இவை

ஏராளமானவற்றை நிறைவேற்றுகின்றன. அவரது வார்த்தைகள் வேலையாக உள்ளன.

... அவரது அக்கறை யாவும் தேவனை எதிர்த்தல் என்ற விஷயத்திலிருந்தும் பக்திவிருத்தியூட்டுதலின் எதிர்மறையான முரண்பாடுகளில் இருந்தும் மந்தையை காப்பது என்பதாகவே உள்ளது; அவர் போதித்தலின் எல்லாப் பொறுப்புக்களிலும் மற்றும் போதித்தலின் ஊழியத்திற்கு பிறமனிதர்களை நியமிக்கும் பொறுப்புக்களிலும், நற்பொருளானது காக்கப்படும்படியும் செய்தியானது மிகவும் தாராளமாய்ப் பரவும்படியும் அக்கறை கொள்ளுகின்றார்; இவை எல்லாவற்றிலும், தீமோத்தேயு, முன் ஒரு போதும் வசனத்தைக் கேள்விப்பட்டிராதவர்களுக்கு அவர்களும்கூட இராஜ்யத்தில் பிரவேசித்து கிறிஸ்துவுக்குள் இருக்கிற இரட்சிப்பை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி வசனத்தை அவர்களுக்கும் அளிக்க வேண்டியதின் அவசியத்தை மறக்கக் கூடாதிருந்தார்.[20]

''உன் ஊழியத்தை நிறைவேற்று.''[21] பகுதி நேர, அக்கறையற்ற, புறக்கணிப்புத் தன்மையுள்ள படிப்பானது ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது. இவ்வகையான ஊழியமானது, சுவிசேஷ ஊழியர் தனது ஊழியத்தைச் செய்து முடிக்கிறார் அல்லது நிறைவேற்றுகிறார் என்பதற்கான "முழு நிரூபணத்தை" மக்களுக்கு ஒருக்காலும் தர முடியாது!

## கட்டளை தொடர்பாக பவுலினால் அமைக்கப்பட்ட மாதிரி (வ. 6-8)

பவுல் தீமோத்தேயுவுக்கு தெளிவானதொரு கட்டளை கொடுத் திருந்தார் என்றால், அவர் (பவுல்) அந்தக் கட்டளையானது அர்ப்பணிக்கப் பட்ட தனது சொந்த வாழ்வில் நிறைவேற்றப்பட்ட மகிமையுள்ள செயல்விளக்கத்தையும் கொடுத்துள்ளார். "ஒரு சுவிசேஷ ஊழியனாக நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்பவற்றை நான் செய்தேன்!" என்று கூறக்கூடிய பவுலின் திறனைக் கண்டு தீமோத்தேயு (மற்றும் நாமும் கூட) மனதில் ஆழ்ந்த உணர்வு கொள்ள முடியும். "அனு பவத்தின் பின்திரையில் இருந்து நான் நிச்சயமானவைகள் என்று அறிந்துள்ள மூன்று சத்தியங்கள் இதோ"! என்றும் பவுல் கூடுதலாய்க் கூற முடிந்தது.

### "நான் விரைவில் மரிக்கப் போகிறேன் என்று அறிகிறேன்"

பவுல் ஏற்கனவே "வார்க்கப்பட்டிருந்தார்"[22] (4:6). இயேசுவைப் போன்றே பவுலும், நீதி முழுமையும் தவறாய் கையாளப்பட்ட நிலையை சந்தித்திருந்தார், அவரது விவரிப்பின்படி, அது இன்னொருவரினிமித்தமாக அன்பின் அழகிய செயலாக, அர்ப்பணிப்பின் பலியாக மாறியது (ரோமர் 14:7, 8; 2 கொரி. 5:14, 15ஐக் காணவும்).

கிறிஸ்தவரைக் காட்டிலும் வேறு ஒருவரும் மரணத்தை அதிக அமைதியான முக நாடியுடன் கண்ணோக்க முடியாது. இதைப் பற்றிய மிகச்

சிறந்த முன்மாதிரி அப்போஸ்தலரான பவுலின் விஷயத்தில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது, அவர் தமக்கு வரவிருந்த மரணத்தை, ஒரு சிறையில் இருந்து கொண்டு, "நான் தேகத்தை விட்டுப் பிரியுங் காலம் வந்தது" என்ற கூற்றுடன் கையாண்டார்.

"பிரியுங்காலம்" (Gk.: *analusis*) என்ற பவுலின் வார்த்தைத் தெரிவு தனிச் சிறந்ததாக உள்ளது (பிலி. 1:21-23ஐக் காணவும்). இந்தச் சொற்றொடரின் அடிப்படையில் மரணம் பற்றிய பவுலின் கண்ணோக்கத்தை பார்க்ளே அவர்கள் பின்வருமாறு விவரித்தார்:

> (அ) இது வண்டியிலிருந்தோ அல்லது கலப்பையில் இருந்தோ ஒரு விலங்கின் நுகத்தை விடுவித்தலுக்கான சொல்லாக உள்ளது. பவுலைப் பொறுத்தமட்டில் மரணம் என்பது கடின உழைப்பில் இருந்து ஓய்வு பெறுதலாய் இருந்தது. அவர் சுமையைக் கீழே இறக்கி வைப்பதில் மகிழ்வடைந்திருப்பார். [எட்மன்ட்] ஸ்பென்சர் (கருத்து) கொண்டி ருந்தது போன்று கடின உழைப்பிற்குப் பின்பு இடர்நீக்கமாக, புயல் வீசும் கடல்களுக்குப் பிறகு துறைமுகமாக, வாழ்விற்குப் பிறகு மரணமாக உள்ளவை நேசிக்கப்படக் கூடிய விஷயங்களாக உள்ளன. வாழ்வின் விட்டுவிட்டு இயங்கும் கிளர்ச்சிக்குப் பின்னர், அவர் நன்கு உறங்குவார். (ஆ) இது பிணைப்புகளை அல்லது சங்கிலிகளை அவிழ்ப் பதற்கான வார்த்தையாக உள்ளது. பவுலைப் பொறுத்தமட்டில் மரணம் என்பது ஒரு விடுதலையாக, விடுவிப்பாக இருந்தது. அவர் ரோமச் சிறைச்சாலையின் எல்லைப் பகுதிகளுக்கு மாற்றாக பரலோக முற்றங்களின் மகிமையுள்ள சுயாதீனத்தைப் பெறவிருந்தார். (இ) இது ஒரு கூடாரத்தின் கயிற்றைத் தளர்த்துவதற்கான வார்த்தையாய் இருந்தது. இது பவுலுக்கு மீண்டும் ஒரு முகாம் அடிக்கின்ற காலமாய் இருந்தது. சிறிய ஆசியா மற்றும் ஐரோப்பா பகுதிகளின் சாலைகளில் அவர் பலமுறை பயணமாய்க் கடந்து சென்றிருந்தார். இப்பொழுது அவர் தமது இறுதியான, மாபெரும் பயணத்தை மேற்கொள்ள விருந்தார்; அவர் தேவனிடம் நடத்திச் செல்லும் சாலையில் பயணம் செய்தார். (ஈ) இது கப்பல் (கரையில்) கட்டி வைக்கப்பட்டுள்ள கயிற்றை விடுவித்தலுக்கான வார்த்தையாக உள்ளது. பவுல் பலமுறை மத்திய தரைக்கடல் பகுதியில் பயணம் சென்றுள்ளார், மற்றும் கப்பல் துறைமுகத்தை விட்டு ஆழமான தண்ணீரில் செல்வதை உணர்ந் துள்ளார். இப்பொழுது அவர் எல்லாவற்றிலும் மகா ஆழத்தில் பயணப் பட வேண்டியிருந்தது; அவர் நித்தியத்தின் பரலோகத்தை அடைவதற் காக மரணத் தண்ணீரின் குறுக்கே பயணப்படுகின்றார்.[23]

மரணம் பற்றி வனப்புமிக்க இந்த ஒப்புகை மற்றும் வெற்றியில் இருந்து பவுல், தனது இரண்டாவது "அறிந்த விஷயத்தை" மேம்படுத்தச் சென்றார்.

## "எனது ஊழியம் வெற்றிகரமாய் இருந்துள்ளது என்பதை நான் அறிகிறேன்"

பவுல், "நல்ல போராட்டத்தை[24] ப் போராடினேன், ஓட்டத்தை

முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (4:7) என்று எழுதினார். பவுல் "நல்ல போராட்டத்தைப் போராடியிருந்தார்," சத்தியத்திற்காக போராட்டத்தில் வாழ்ந்திருந்தார் (2 கொரி. 10:3-6; எபே. 6:10-18). அவர் தாம் "ஓட்டத்தை முடித்திருந்ததை," தனது சோதனைகளின் மத்தியிலும் கூட தனது ஊழியத்தை நிறைவேற்றியதை (கொலோ. 1:24-29) அறிந்திருந் தார். அவர் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் தனது "விசுவாசத்தைக் காத்துக் கொண்டார்" (2 தீமோ. 4:16-18).

பவுலின் சொற்றொடராக்கம் ஒரு பரந்து விரிந்த கூட்டத்தினரைத் தொட்டுள்ளதாகச் சிலர் கவனித்துள்ளனர். "நல்ல போராட்டத்தைப் போராடினேன்" என்பது - படைவீரர்கள் என்ற வகையில் - ரோமர்களுக்கு மிகவும் பிடித்ததாய் இருக்கலாம்; "ஓட்டத்தை முடித்தேன்" என்பது - ஓட்டக்காரார்கள் என்ற வகையில் - கிரேக்கர்களுக்கு மிகவும் பிடித்ததாய் இருக்கலாம்; "விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்பது - தேவனு டைய மக்கள் என்ற வகையில் - யூதர்களுக்கு மிகவும் பிடித்ததாய் இருக்கலாம்.

"நான் (இதைச்) செய்துள்ளேன்" (கிரேக்கம்: *egonismai, teteleka, tetereka*) என்ற இந்தக் கூற்று ஒவ்வொன்றும் முற்று வினைச் சொல்லாக உள்ளது, இது பவுல் உண்மையிலேயே போராட்டத்தைப் போராடி, விசுவாசத்தின் ஓட்டத்தை முடித்திருந்தார் என்பதை இலக்கண ரீதியாக வலியுறுத்துகின்றது! இயேசுவைப் போலவே இருவரும் தாம் விட்டுப் பிரியும் வேளையில் "முடிந்தது" என்று கதறியிருக்க முடியும் (யோவா. 19:30 மற்றும் அப். 9:15, 16 ஆகியவற்றை அப். 19:10; 20:26, 27; கொலோ. 1:23; 2 தீமோ. 4:17 ஆகியவற்றுடன் ஒப்பிடவும்).

தனிச் சிறப்புள்ள இந்த மூன்று கூற்றுகளின் மீது நாம் சில உற்று நோக்கல்களை மேற்கொள்வோம். முதலாவது, பவுல் "நல்ல" போராட்டத் தில் ஈடுபட்டிருந்தார். இது ஏதோ "ஒரு" போராட்டம் (KJV) என்பதாயிராமல், (ஆங்கிலத்தில்) "the" என்ற சிறப்பு விகுதி பெறத்தக்க போராட்டமாக உள்ளது, மற்றும் இந்தப் போராட்டம் ஒரு "நல்ல" போராட்டமாய் உள்ளது (எபே. 2:10; கலா. 6:10; மத். 5:16; ரோமர் 12:20, 21; 2 கொரி. 10:3-6 ஆகியவற்றைக் காணவும்). கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு வீண்முயற்சியாகவோ அல்லது பகட்டுக் கொண்டாட்டமாகவோ இருப்பதில்லை - இது ஒரு போராட்டமாக[24] உள்ளது.

பலவீனமானவர்கள் பலம் பெறுவதற்காகவே இந்தப் போராட்ட வட்டத்தினுள் பிரவேசிக்கின்றனர். அமைதியானவர்களும் மென்மையான வர்களும் இப்போராட்டத்திற்குள்ளாகும்படி அழைக்கப்படுகின்றனர், ஆனால் அவர்கள் பலத்திற்காக நம்பியுள்ள கர்த்தரின் மேற்பார்வையின் கீழும், அவரது ஆயுதத்தைத் தரித்துக் கொள்ளத் தயாராக, ஒரு நிலைப் பாட்டை எடுத்த நிலையிலும் மட்டுமே இதைச் செய்யும்படி அழைக்கப் படுகின்றனர் (எபே. 6:10-18; பிலி. 4:10-13). சுயமறுப்பு மற்றும் சுய ஒழுக்கம் ஆகியவை அன்றாட வாழ்வின் முறைமைகளாய் உள்ளன (லூக். 9:23; 1 கொரி. 15:58), இங்கு பயமும் கூச்சமும், வல்லமை, அன்பு மற்றும் ஒழுங்கு முறையால் இடம் மாற்றப்படுகின்றன (2 தீமோ. 1:7). எஜமானருக்காக

அணிவகுத்துச் செல்லுதல் என்பது உலகளாவிய அளவில் நடக்கின்றது (மத். 28:18-20), இது அன்புகூரப்பட்டவர்கள் அன்பினால் வெற்றி கொள்ளும் வகையில் நடக்கின்றது (1 யோவா. 4:19-21; 2 கொரி. 5:13-15; ரோமர் 8:28, 35-39).

இரண்டாவது, பவுல் ஓட்டத்தை முடித்திருந்தார். தொடங்குதல் என்பது சுலபமானதாக உள்ளது, ஆனால் சீர்த்தன்மையையும் நிறைவு செய்தலையும் கூட்டுவதற்கு கிறிஸ்துவைப் போன்ற பண்பு அவசிய மாகின்றது. மத். 13:18-23ஐக் கவனமாய்ச் சிந்தியுங்கள், இங்கு முடிப்பதற் குத் தவறி விட்ட காரணத்தினால் நான்கில் மூன்று பேர் இழந்து போகப் பட்டனர்.

முடிக்கத் தவறுதல் என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஆத்துமாக்களை நிச்சயமாகவே பாதித்துள்ளது (கலா. 1:6, 7; 5:7; 2 பேது. 2:21, 22; வெளி. 3:1-3). தொடங்குபவர்களை இயேசு விரும்புகின்றார், ஆனால் வெளியேறுபவர்களையும் நிறுத்தி விடுபவர்களையும் அவர் வெறுப்புடன் பார்க்கின்றார் (லூக். 9:57-62). அவரது ஓட்டம் ஒரு "விரைவுப் பந்தயமாக" இருப்பதில்லை, ஆனால் அது ஒரு "நெடும் ஓட்டமாக" உள்ளது; அவரது அடிச்சுவடுகள் தூய்மைக்கும் நீதிக்கும் வழிநடத்துகின்றன - மற்றும் அவை முடிக்கின்ற வரையிலும் வழிநடத்துகின்றன (1 பேது. 2:21-24; 1 யோவா. 3:7, 10; 1 பேது. 1:13-16; வெளி. 22:11).

மூன்றாவது, பவுல் விசுவாசத்தைக் காத்திருந்தார், விசுவாசத்தினால் காக்கப்பட்டிருந்தார் (எபி. 11:1-12:3; ரோமர் 5:1, 2). அவர் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய வேளையில் (குறிப்பாக, "கட்டுகள்," "உபத்திரவங்கள்," ''பாடுகள்,'' ''என்னை விட்டு சென்று விட்டார்கள்,'' ''வார்க்கப் படுகின்றேன்," "விட்டுப்பிரிதல்" போன்ற வார்த்தைகளின் கண்ணோக்கில்) தைரியமான மன உறுதியைக் காண்பித்தார். பவுல் தமக்கெதிராகக் கண்டறியப்படாத மற்றும் நியாயமற்ற குற்றச் சாட்டுகளினால் மரணத்தை எதிர்நோக்கியிருந்தார். அந்த சூழ்நிலைகளின் கீழ், அவரது வார்த்தைகள், இம்மனிதர் தரிசித்து அல்ல விசுவாசித்தே வாழ்ந்தார் என்பதை எதிரொலிக்கின்றன!

பவுலின் சிறைப்படுத்தப்பட்டிருந்த நெருக்கடி நிலையை சிந்தையில் கொண்டு, 2 கொரி. 4:16-5:8ல் உள்ள அவரது வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளை யல்ல, காணப்பாடாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்பாடதவை களோ நித்தியமானவைகள்.
>
> பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்

தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம். தரித்துக்கொண்டவர்களானால், நிர்வாணிகளாய்க் காணப்பட மாட்டோம். இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

இது பவுலின் மூன்றாவது “அறிகிறேன்” விஷயத்தினால் உச்சமாக்கப் பட்டுள்ளது.

### “நான் பலன் அளிக்கப்படுவேன் என்று அறிகிறேன்”

கிறிஸ்தவரின் பலன் எப்பொழுது கிடைக்கின்றது? இப்பொழுதே! பவுல், “எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது”[25] (4:8) என்று கூறினார். இந்தச் செய்தியானது தம்முடைய கிருபையினால் பவுல் தனது வாழ்வை முடிக்க எவ்வாறு தீர்மானிப்பார் என்று அறிந்திருந்த சர்வ ஞானமுள்ளவரான தேவனிடமிருந்து ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர் மூலமாக வந்தது (கலா. 1:11, 12; வெளி. 2:10 ஆகியவற்றைக் காணவும்).

பிள்ளைகளில் பலர் நிச்சயமற்ற ஒரு பரிசுக்காக ஏங்குகின்றனர், ஏனென்றால், தந்தை அதை இன்னும் வாங்கியிருப்பதில்லை. பவுல் தனது பலனை தனக்காக, தனது பரலோக தந்தை ஏற்கனவே வைத்து இருப்பதை அறிந்தார்.

வாக்குத்தத்தம் என்னவாக இருந்தது? கர்த்தர் “தந்தருளுவார்.”[26] கர்த்தர் நம்மில் எவருக்கும் நீதியின் கிரீடத்தைத் தரக் கடன்படாதவராய் இருக்கையில், அதை தம்முடைய கிருபையினால் விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார் (வெளி. 2:10). கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காக்கிறார் (2 பேது. 3:9; 1 கொரி. 15:58). கர்த்தர் “தந்தருளுவார்” என்றால் பவுல் அதைத் தாம் பெறுவதை அறிந்திருந்தார்!

(இந்த) வாக்குத்தத்தத்தைச் செய்தது யார்? “நீதியுள்ள[27] நியாயதிபதி” (4:8, 9). கிறிஸ்துவின் அருகில் நீதியின் எல்லாப் பண்பினங்களும் வைக்கப்படும் பொழுது, அவர் முற்றிலும் தகுதிப்பட்டிருப்பதை ஒருவர் காண்கின்றார்! கர்த்தர் வாக்குத்தத்தம் செய்துள்ளதை நிறைவேற்றுவார் என்று பவுல் உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்ததில் வியப்பெதுவும் இல்லை!

தொகுப்புரையில், பவுல் இந்த பலனை, கர்த்தருடைய பிரசன்னத்தை

"விரும்புகிற" யாவருக்கும் உத்தரவாதப்படுத்தினார். எந்த ஒரு தருணத்திலும் கிறிஸ்துவைக் காணுதல் என்பது இன்னமும் நித்தியத்தைக் காணுதலாகவே உள்ளது (1 யோவா. 1:1-3). அவரது "தரிசனங்களின்" பட்டகங்கள் மூலம் நமது அன்பு விரிவாக்கப்படாத வரையில், அது முழுமையற்றதாக உள்ளது மற்றும் அங்கீகரித்தலுக்கு நிலைநிற்காததாகவும் இருக்கும். அவரை ஒருவர், நித்தியமானவராக, தேவனுடைய சாயலில் இப்பொழுது எல்லாவற்றையும் ஒன்றுகூட்டித் தாங்குகிறவராகக் காண வேண்டும், அவர் இப்பொழுது எல்லா துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் மேலானவராக, சபைக்குத் தலையாக இருக்கிறார் (எபே. 1:18-23; 1 பேது. 3:22; மத். 28:18-20), மற்றும் அவர் எல்லாரையும் நியாயந்தீர்க்கத் திரும்பி வருபவராகக் (4:1) காண வேண்டும்.

கிறிஸ்துவில் தீமோத்தேயுவின் விசுவாசமானது அவர் தம் ஊழியத்தை நிறைவேற்றும்படி ஊக்குவித்தலை அவருக்குப் பவுல் விரிவாக்கக் காரணமாயிற்று: பலனைப் பற்றிய பவுலின் உறுதியான நம்பிக்கை. பவுல் நாடித் தொடர்ந்த அந்த ஓட்டத்தை நாடித் தொடரும் யாவருக்கும் அதே பலன் கிடைக்கின்றது! பவுலின் உறுதியான நம்பிக்கையில் இருந்து, நாம் தொடர்ந்து செல்லத் தைரியத்தைக் கட்டி எழுப்புவோமாக!

## பாடம் 11: ஆட்களும் தனிப்பட்ட வேண்டுகோள்களும் (4:9-22)

### பேராவல் கொள்ளப்பட்ட துணை (வ. 9-13)

மரணத்தை எதிர்நோக்கும்போதும்கூடப் பவுல் தைரியமாய் இருக்கையில், இது அவரைச் சுற்றியிருந்த மனிதப் பிணைப்புகளிலிருந்து அவரை நீக்கி விடாதிருந்தது. அவர் இவ்வுலகிற்குப் பிரியாவிடை கூறுமுன் தீமோத்தேயுவை மீண்டும் ஒரு தரம் பார்த்தல் என்பது எவ்வளவு மெய்சிலிர்க்கத் தக்கதாயிருக்கும்! இந்த ஆழமான ஏக்கம் ஒரு உணர்ச்சியூட்டும் வேண்டுகோளில் வெடித்து முன் வந்தது.

"நீ சீக்கிரமாய்[28] என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு"[29] என்பதே வேண்டுகோளாயிருந்தது. கர்த்தருடைய ஊழியத்திற்காகப் பவுல் தம் உடன் ஊழியர்களை ஓரிடத்திற்குச் செல்லும்படியோ அல்லது ஓரிடத்தில் தங்கியிருக்கும்படியோ பல முறை கேட்டுள்ளார் (4:12; 1 தீமோ. 1:3; தீத்து 1:5ஐக் காணவும்), ஆனால் இம்முறை தீமோத்தேயு ரோமாபுரிக்கு கர்த்தருடைய ஊழியத்திற்கு வருதல் என்பதைக் காட்டிலும் அதிகமான வற்றைச் செய்ய வேண்டியிருந்தது. பவுல் "என்னிடத்தில்" (தன்னிடம்) வா என்று தீமோத்தேயுவைக் கேட்டுக் கொண்டார். கர்த்தருடைய ஊழியம் பவுலின் சிந்தையில் இருந்திருக்கலாம், ஆனால் தீமோத்தேயுவை விரைவில் காண வேண்டும் என்பது பேரார்வம்மிக்க மற்றும் தீவிரமான விருப்பமாய் இருந்தது (1:3, 4).

*பவுலை விட்டுச் சென்றிருந்த மூவருடன் தொடர்புடைய தற்கால சூழ்நிலைகளில் (4:10) பவுலின் தனிப்பட்ட பிரச்சனைகள் அடங்கி யிருந்தன. முதலாவது, விட்டுச் சென்ற சீஷரான தேமா "இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்த" காரணத்தினால் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்று விட்டார். இங்கு "ஆசை" என்பது agape என்பதிலிருந்து வருகிறது - பொதுவாக இது மேலான அன்பாகக் கருதப்படுகிறது. தேமா இப்படிப் பட்ட ஆசையை "இப்பிரபஞ்சத்தின் மேல்" (1 யோவா. 2:15-17ஐக் காணவும்) வைத்ததின் மூலம் காண்பித்தார் என்பதே ஒரு பிரச்சனை யாயிருந்தது. மிகவும் நல்ல ஆசை கூட தவறான இடத்திலோ அல்லது தவறான நபருடனோ கூட வைக்கப்படக் கூடும் என்பதற்கு இது ஒரு நிரூபணமாக உள்ளது. எரேமியா 18:15-17ஐக் கவனியுங்கள், அங்கு யூதா மக்கள் யேகோவா தமக்கு மட்டுமே காண்பிக்கும்படி கேட்டுக் கொண்ட பலி செலுத்துதல்களை அந்நிய தெய்வங்களுக்குச் செலுத்தியதால் தண்டிக்கப்பட்டனர்.*

*விதைப்பவன் உவமையில் தேமா எந்த இடத்திற்குப் பொருத்த மாவார்? (மத். 13:18-23; லூக். 8:5-15)? தேமாவின் சீஷத்துவத்தின் இறங்கு நடையைப் பற்றிய பின்வரும் ஆய்வை பார்க்ளே அவர்கள் கொடுத்தார்:*

> *பவுலின் நிருபங்களில் மூன்று இடங்களில் தேமாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது; இம்மூன்று குறிப்புகளும் தங்களுக்குள் துன்ப மான வரலாற்றைக் கொண்டுள்ளன என்பது சரியானதாயிருக்கலாம்.* (i) *பிலேமோன் 24ல் பவுல் தனது உடன் ஊழியர்கள் என்று அழைக்கும் மக்கள் குழுவில் தேமா பட்டியலிடப்பட்டுள்ளார்.* (ii) *கொலோசெயர் 4:14ல் தேமா எவ்வித விளக்கமும் இன்றி குறிப்பிடப்பட்டுள்ளார்.* (iii) *இங்கு* [*2 தீமோ. 4:10*] *தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து பவுலை விட்டுச் சென்றிருந்த தேமாவாக இருக்கின்றார். முதலாவது தேமா உடன் ஊழியரான தேமாவாய் இருந்தார்; இரண்டாவது, தேமா தேமாவாக மட்டும் இருந்தார்; மூன்றாவது, தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து (பவுலை) கை விடுபவராயிருந்தார். இங்கு ஆவிக்குரிய வகையின் படிப்படியான அழிவின் வரலாறு உள்ளது. அந்த உடன் ஊழியர் கொஞ்சம் கொஞ்ச மாக கைவிடுபவர் ஆனார்; கனத்திற்குரிய பட்டப் பெயரானது வெட்கக் கேட்டிற்கு உரியதாயிற்று.*[30]

*இரண்டாவது, கொஞ்சமே அறியப்பட்ட சீஷரான கிரெஸ்கே கலாத்தியாவுக்கு (பிரான்ஸ் நாட்டுக்கு) அனுப்பி வைக்கப்பட்டார்.*

*மூன்றாவது, அர்ப்பணிப்புள்ள சீஷரான தீத்து, கிரேத்தாவிலும் (தீத்து 1:5) மற்றும் அகாயாவிலும் (தீத்து 3:12ஐக் காணவும்) ஊழியம் செய்த பிறகு தல்மத்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இல்லிரிக்கத்தில் உள்ள தல்மாத்தியா வுக்கு நில மார்க்கமாகவோ அல்லது ஆதரியாக் கடல் மூலமாகவோ வடக்கு நோக்கிச் செல்வதற்கு மேல் நோக்கி நகர்தலானது இயல்பானதாக இருந்திருக்கும். தீத்துவுக்குத் தொடர்புடைய விஷயங்கள் பற்றி ஹென்ரிக்ஸென் அவர்கள் பின்வருமாறு சரியாகக் கவனித்துள்ளார்:*

பவுலை விட்டுப் புறம்பே இருந்த பொழுதெல்லாம், அவர் ஒரு ஊழியத்திலேயே இருந்தார், அவர் ஒருக்காலும் ஆதிரியாக் கடலின் கிழக்குக் கரையில் இருந்து அல்லது அதன் தென் விரிவாக்கமான அயோனின் கடலில் இருந்து மிகவும் தூரத்திற்குச் சென்றிருக்க வில்லை. அவர் வல்லவராக, தைரியம் உள்ளவராக, மற்றும் பரிசுத்தப் படுத்தப்பட்டவராக இருந்து, சண்டையிட்ட கொரிந்தியரையும், பொய்யர்களான கிரேத்தாத் தீவாரையும், மற்றும் சண்டையிடுவதில், புகழ்பெற்ற தல்மாத்தியர்களையும் எவ்விதம் கையாளுவது என்று அறிந்திருந்தார்.[31]

பவுலின் ஆட்கள் மற்றும் திட்டங்கள் ஆகியவை இன்னும் மூன்று நபர் தன்மைகளை/நபர்களை உள்ளடக்கியிருந்தன. லூக்கா, மாற்கு மற்றும் தீகிக்கு (4:11, 12). லூக்கா மாத்திரம் அங்கிருந்த சீஷராய் இருந்தார் (4:11). பவுலுடன் லூக்காவிற்குள்ள உறவு குறித்தும் அவர்களின் ஒப்புமை வாய்ந்த பண்புகள் குறித்தும் வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள் பின்வரும் ஆய்வைக் கொடுத்தார்:

மூன்றாவது சுவிசேஷத்தை எழுதியவர் குறிப்பிடத்தக்க நபராய் இருந்தார். அவர் "பிரியமுள்ள வைத்தியராக" (கொலோ. 4:14), பவுலிடத்திலும் சுவிசேஷத்திற்கும், கர்த்தருக்கும் எப்பொழுதும் பற்றுறுதி கொண்டவராக, இருந்தார். அவர் அடிக்கடி பவுலின் பயணத் துணைவராய் இருந்துள்ளார், இது நடபடிகளின் "நாங்கள்" பகுதிகளில் குறிப்பிடப்படுகிறது (16:10-17; 20:6-16; 21; 27; 28). இவர் பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் துரோவா மற்றும் பிலிப்பி நகர்களில் பவுலுடன் இருந்தார், பிந்திய இடத்தில் (பிலிப்பியில்) அவர் விட்டுச் செல்லப்பட்டார் என்பது தெளிவு (அப். 16:17-19). மூன்றாம் பயணத்தின் முடிவில் அவர் பிலிப்பியில் பவுலுடன் மீண்டும் இணைந்து கொண்டார் என்று காணப்படுகிறது (அப். 20:6), மற்றும் அவர் எருசலேமுக்குப் பவுலுடன் துணையாகச் சென்றார். (பின்பு) சற்றுக் கால இடைவெளியளவுக்கு நாம் அவரைக் காண்பதில்லை. ஆனால் திடீரென்று அவர் மீண்டும் தோன்றுகின்றார், ஏனெனில் அவர் பலஸ்தீனத்திலிருந்து ரோமாபுரிக்கு நீண்ட மற்றும் அபாயமான கடல் பயணத்தில் பவுலுடன் துணையாக இருந்துள்ளார் (அப். 27). அவர், (பவுல்) அப்போஸ்தலரின் முதல் மற்றும் இரண்டாம் ரோமச் சிறையிருப்பின் பொழுது அவருடன் இருந்தார் (கொலோ. 4:14; பிலே. 24; 2 தீமோ. 4:11). பவுலுக்கு ஒரு மருத்துவரும் ஒரு நண்பரும் தேவைப்பட்டனர். லூக்கா இவ்விரு தன்மையும் கொண்டவராய் இருந்தார் ...

லூக்காவுக்கும் பவுலுக்கும் பொதுவான பண்புகள் அதிகம் இருந்தன. இவ்விருவருமே கல்விமான்களாக, கலாச்சாரப் பண்புள்ள மனிதர்களாய் இருந்தனர். இவ்விருவருமே பெரிய மனம் கொண்ட வர்களாக, விசாலமான ஆவியுடையவர்களாக, இரக்க உணர்வுடை யவர்களாக இருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்விருவருமே விசுவாசிகளாகவும் ஊழியர்களாகவும் இருந்தனர்.[32]

மாற்கு என்பவர் விரும்பப்பட்ட சீஷராய் இருந்தார். பவுல்,

*"... ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (4:11)* என்று கூறினார். இவ்விடத்தில் புதிய ஏற்பாட்டின் "நபர்த்துவ மேம்பாட்டு" வரலாறுகளில் ஒன்று உள்ளது. தனிச்சிறப்பு வாய்ந்த மூன்று காட்சிகளைக் காண்கின்றோம்:

*காட்சி 1:* மாற்கு *"அவர்களோடே கூட ஊழியத்திற்குச் சென்றிராத"* படியினால் (அப். 15:36-41ஐக் காணவும்) அவர், சண்டைக்கு ஆதார மூலமாய் இருந்ததை நாம் காண்கின்றோம். இந்தக் காட்சியில் மாற்கு, பவுல், பர்னபா என்ற மாபெரும் ஊழியர்கள் இருவருக்கிடையில் சூடான விவாதம் நடக்கக் காரணமாய் இருந்தார். ஊழியத்திலும் செயல்பாட்டிலும் பவுல் தீவிரமானவராய் இருந்தார். பர்னபா என்பவரோ, போராடும் நபருடன் இரண்டாம் மைல் தூரமும் நடந்து செல்லும் நபர்த்துவ தன்மையுடையவராக இருந்தார் (மத். 5:41; அப். 4:36, 37; 9:23-30ஐக் காணவும்). மாற்கு அவர்களுடன் ஊழியத்திற்குச் செல்லாமல் தவறியது என்பது என்ன காரணத்தினாலாயினும், அது பவுலின் தீவிரமான ஆவியுடன் அன்பாய் அமரவில்லை.

*காட்சி 2:* மாற்கு என்பவர் (ஒருவேளை பவுல் இவருடன் ஊழியம் செய்வதை விரும்பவில்லை என்று கேள்விப்பட்டதினால்) தம்மை ஐக்கியத்திலிருந்து அகற்ற முயற்சி செய்யும் சகோதரர்களிடத்தில் உள்ள எந்த "உட்குழு உண்டாக்கும் செயலுக்கும்" ஒரு கோர்வையான கூற்றை ஏற்படுத்தக் காரணமாகி "காற்றைச் சுத்தமாக்கும்" சகோதரராய்க் காணப் படுகின்றார். கூடுதலான சொல் விளக்கத்தில் பவுல் தமது பற்களை இட்டார்/தமது கருத்தைக் கூறினார்: "(இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன் [மாற்கு] உங்களிடத்தில் வந்தால் இவனை *அங்கீகரித்துக் கொள்ளுங்கள்)"* (கொலோ. 4:10). காட்சி 1ல் பவுல், மாற்குவைப் பற்றி என்ன நினைத்திருப்பினும், 2ம் காட்சியானது பவுல் மாற்குவிடமிருந்து ஐக்கியத்தை நீக்கிக் கொள்ளவில்லை என்பதைத் தெளிவாக்குகின்றது.

யாரேனும் ஒரு சகோதரர் அல்லது சகோதரியைப் பற்றி நீங்கள் வதந்திகளைக் கேள்விப்படுகிற பொழுது, உண்மைகள் எதுவும் அளிக்கப் படாத பொழுது இதை நினைத்துக் கொள்ளுங்கள். கண்டறியப்படாத, நியாயந்தீர்க்கிற வதந்திகளினால் சிலர் சகோதரத்துவத்திலிருந்து அல்லது ஊழியம் செய்வதிலிருந்து *துண்டிக்கப்படுகின்றனர்!* சகோதரர்கள் மாற்குவை அவமதியாமல் அல்லது தவறாய் நடத்தாமல் இருப்பதை நிச்சயித்துக் கொள்ளும்படி பவுல் தமது விளக்கங்களில்/விமர்சனங்களில் வலிவாய் இருந்தார்.

*காட்சி 3:* வயதானவராக, மாற்குவுடன் ஊழியம் செய்ய ஏங்கியவராக இருந்த இந்தப் பவுலே முன்பு தமக்கும் தமது மாபெரும் உடன் ஊழியரான பர்னபாவுக்கும் இடையில் சண்டை ஏற்படக் காரணமாய் இருந்தார் என்று நாம் காண்கின்றோம். மக்கள் மாறுகின்றனர். இவ்விஷயத்தில் பவுலோ அல்லது மாற்குவோ (அல்லது இருவருமோ) யார் மாறியிருப்பினும், இது ஒரு மாபெரும் பாடத்தை முன் வைக்கின்றது. சில சமயங்களில் நாம் சரிப்படுத்துதல்களை ஏற்படுத்துவது அவசியமாகின்றது, மற்றும் நாம்

பிறரும் கூட சரிப்படுத்துதல்களை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகளை அவர்களுக்கு விரிவாக்க வேண்டும். மாற்கு "பிரயோஜனமுள்ளவர்"[33] (4:11) என்று பவுல் கண்டிருந்ததினால் அவர் (பவுல்) மாற்குவுடன் ஊழியம் செய்ய விரும்பினார் என்பது குறிப்பிடத்தக்க உண்மையாக உள்ளது. மாறுபடுகிற சகோதரர்கள் - காலம், சத்தியம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் மூலமாக - விரும்பத்தக்க கூடுதல்களை நிலைநாட்டக் கூடியவர்களாய் இருக்கும் பொழுது, அது எவ்வளவு மேன்மையானதாக உள்ளது!

தீகிக்கு என்பவர் தயாராயிருந்த, நம்பத் தகுந்த சீஷராய் இருந்தார், இவரைப் பவுல் எபேசுவுக்கு அனுப்பியிருந்தார் (4:12). எபேசியப் பகுதிகளில் தீமோத்தேயுவின் இடத்தை மேற்கொள்ளப் பவுல் தீகிக்குவை அனுப்பியிருக்கலாம் (1 தீமோ. 1:3ஐக் காணவும்), எனவே தீமோத்தேயு பவுலுடன் இருக்க துரிதமாய் வந்திருக்க முடியும். இம்மூவரும் கடந்த காலத்தில் ஒன்றுகூடி ஊழியம் செய்திருந்தனர் (அப். 20:1-6ஐக் காணவும்).

தீகிக்குவைப் பற்றிய வேதாகம விவரிப்புகள் ஒவ்வொன்றின்படியும் அவர் ஒரு நல்ல மாற்றாளாய் இருந்திருப்பார். (1) அவர் பவுலுக்காக செய்திகளை விநியோகித்திருந்ததில் போதிய அளவுக்கு நம்பத் தகுந்தவராய் இருந்தார் (எபே. 6:21, 22; கொலோ. 4:7, 16). (2) அவர் ஒரு அன்புமிக்க/நேசிக்கத்தக்க, உண்மை நிறைந்த ஊழியராய் இருந்தார். (3) அவர் ஒரு அறிக்கையைத் தருவதில் நம்பத் தக்கவராக, "... அவைகளையெல்லாம் ... உங்களுக்கு அறிவிப்பான்" (எபே. 6:21) என்ற வகையில் வல்லவராய் இருந்தார். (4) அவர் இருதயங்களுக்கு "ஆறுதல்"[34] தருபவராய் இருந்தார் (எபே. 6:22). இந்த விவரிப்புகள் யாவற்றையும் ஒன்றாயிட்டு, திறன் வாய்ந்த இந்த சகோதரரால் சபைக்குழுமத்தின் எத்தனை தேவைகள் பேணப் பட்டிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். இவர் 2 தீமோத்தேயு நிருபத்தில் பவுலிடமிருந்து வந்த வேண்டுகோளை கவனித்திருந்தார் என்றால், எபேசுவிலிருந்த சகோதரர்களின் தேவைகள் சந்திக்கப்படுவது பற்றி தீமோத்தேயு ஒரு கணமும் கவலை அடையத் தேவையிருந்திராது. தீகிக்கு நம்பத் தக்கவராகவும் ஊழியம் செய்யச் செல்லுவதற்குத் தயாரான வராகவும் இருந்தார்! இதற்கு முன்பே தீகிக்கு எபேசுவில் இருந்துள்ளாரே (எபே. 6:21, 22).

பவுலின் வேண்டுகோளானது அவரது தனிப்பட்ட உடமைகள் பற்றி குறிப்பிட்டது (4:13). "எடுத்துக் கொண்டுவா" என்ற வார்த்தையில் பவுலின் உண்மையான பெரு விருப்பம் தெளிவாகின்றது. இது மேலங்கி மற்றும் புத்தகங்கள்[35] ஆகியவற்றிற்கான மற்றும் விசேஷமாக தோல் சுருள்களுக் கான[36] ஒரு கெஞ்சுகிற வேண்டுகோளாக உள்ளது. பவுல் வேண்டுகோள் விடுத்தவை பற்றி, பின்வரும் கூடுதலான உட்கண்ணோட்டத்தை பார்க்ளே கொடுத்தார்:

> அவர் புத்தங்களை விரும்புகின்றார்; ... மற்றும் இந்த சுருள்கள் சுவிசேஷங்களின் தொடக்க கால வடிவங்கள் அடங்கப் பெற்றவை களாய் இருக்கலாம். அவர் தோல் சுருள்களை விரும்பினார். தோல் சுருள்கள் (பின்வரும்) இரண்டு வகைகளில் ஏதாவது ஒன்றாக இருக்க முடியும். அவை பவுலுக்கு அவசியமான சட்டப் பூர்வப் பத்திரங்

*களாக, விசேஷமாக அவரது ரோமக் குடியுரிமைச் சான்றிதழாக இருக்கலாம். (அல்லது) பெரும்பாலும் அவை பழைய ஏற்பாட்டின் எபிரெய மொழி வேத வசனங்களின் பிரதிகளாய் இருக்கலாம், ஏனெனில் எபிரெயர்கள் தங்கள் பரிசுத்த நூல்களின் சுருள்களை விலங்குகளின் தோலில் செய்யப்பட்ட சுருள்களில் எழுதினர். பவுல் சிறையில் இடப்பட்டு மரணத்திற்காகக் காத்திருந்த போது அவர் எல்லாவற்றைப் பார்க்கிலும் தேவன் மற்றும் இயேசு ஆகியோரின் வார்த்தையை மிகவும் விரும்பினார்.[37]*

*இது பவுலின் வேண்டுகோளாய் மட்டுமே இருந்திருக்கலாம் எனினும், தீமோத்தேயு இப்பயணத்தை மேற்கொண்டிருந்தால், பவுல் விடுத்த வேண்டுகோள் யாவற்றுக்கும் இடமளித்திருப்பார் என்பதில் யாரேனும் ஐயப்படுகின்றாரா?*

## வாழ்வின் துன்பங்களுக்கு மத்தியில் உயர்வான நம்பிக்கை *(14-18)*

*இப்பகுதியானது தீவிரமான வகையில் தனிப்பட்டதாக (''நான்,'' "எனக்கு," "என்னுடைய," "நீ" மற்றும் "நம்முடைய" என்பவைகள் இந்த ஐந்து வசனங்களில் பன்னிரெண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளன), இருக்கையில், இது சோதனை வேளைகளினூடே பவுலின் தனிப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், தெய்வீக விஷயங்களில் விடா முயற்சியு டன் இருப்பதற்கான வேண்டுகோள்களின் மிகை குரலுடன் ஒலிக்கின்றது. இது, பவுல் "தீமோத்தேயுவே, எனது உபத்திரவங்களின் போது தேவனுக்கு முன்பாகவும் மனிதர்கள் மத்தியிலும் நான் பெற்ற அனுபவத்தின் காரணமாக, சோதனைகளைக் கையாள்வது எவ்வாறு என்று நான் உனக்குக் கூற அனுமதி" என்று கூறுவது போல் உள்ளது. சோதனை வேளைகளுக்கான ஏவுதல் பெற்ற மூன்று வழிகாட்டு நெறிகளைப் பவுல் தீமோத்தேயுவுக்கு அளித்தார்!*

*(1) "மனிதர்கள் உங்களுக்குத் தீங்கிழைக்கும் பொழுது, அவர்களைக் கர்த்தரிடம் விட்டுவிடுங்கள்" (4:14, 15ஐக் காணவும்). இம்முடிவானது கன்னானாகிய (உலோகத் தொழிலாளி) அலெக்சந்தருடனான[38] அனுபவங் களின் மீது நிலை கொண்டிருந்தது. இந்நபர் பவுலுக்கு "அதிகம் தீமை"[39] செய்திருந்தார்.[40] அலெக்சந்தர் விவாதங்கள் ("நம்முடைய வார்த்தைகளுக்கு எதிர்த்து நின்றவன்") மற்றும் செயல்கள் ("எனக்கு வெகு தீமை செய்தான்") ஆகிய இரண்டையும் பயன்படுத்தினார். பவுல், ''வெகு'' என்ற வார்த்தையை "தீமை" என்பதுடன் கூட்டியதை ஆழ்ந்து சிந்திக்கையில் அவர் இந்த அலெக்சந்தரைக் குறிப்பாய் சுட்டிக்காட்டியது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.*

*பவுலின் நடத்துதலானது எவ்வளவு நியாயமற்றதாக இருந்திருப் பினும், அவர் அப்படிப்பட்ட நியாயமற்ற நடத்துதலின் முன்பு எப்படி பதில்செயல் செய்வது என்பதை "அக்கினியின் கீழாக" (இருந்து) செயல் விளக்கப்படுத்தியிருந்தார் (அப். 23:1-5; 16:35-40ஐக் காணவும்).*

தாமே அலெக்சந்தரைப் பழிவாங்குவதற்குப் பதிலாக ''தக்க தண்டனையளிக்கும் விஷயத்தை பவுல் முற்றிலுமாகக் கர்த்தரிடத்தில் விட்டுவிட்டார் (இ.வ. உபா. 32:35; இ.வ. ரோமர் 12:17-19; 1 பேதுரு 2:23). எனவே, அவர் உடனடியாக, அவனுடைய செய்கைக்குத் தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்று கூடுதலாய்க் கூறினார். இது தவறானது மேற்கொள்ள அனுமதிக்கும்படியான ஒரு எதிர்ப்பற்ற சரணடைதலாக இருப்பதில்லை. இது சோதனையை இப்பூமி அளிப்பதைக் காட்டிலும் மாபெரும் மற்றும் அதிகம் நம்பகத் தன்மையுள்ள நியாயாதிபதியிடத்தில் திருப்பி விடுதலாய் உள்ளது! கிறிஸ்து நியாயந்தீர்க்க மீண்டும் வரும் பொழுது, அவர் அலெக்சந்தர் செய்துள்ளவற்றை மறக்க மாட்டார், ஆனால் அவனுக்குச் சேர வேண்டியதை அளிப்பார் (வசனம் 8ல் உள்ள அதே வினைச் சொல் இங்கும் உள்ளது, வசனம் 8ல் இது சாதகமான கருத்தில் பயன் படுத்தப்பட்டுள்ளது). சங். 62:12; நீதி. 24:12; மத். 25:31-46; யோவா. 5:28; ரோமர் 2:6; 2 கொரி. 11:15; வெளி. 2:23; 20:13 ஆகியவற்றைக் கவனிக்கவும்.[41]

*(2) "எல்லாரும் உங்களைக் கைவிடுகின்ற பொழுது, இயேசுவைப் போலிருங்கள்" (4:16; லூக். 23:34; அப். 7:59, 60 ஆகியவற்றைக் காணவும்).* பவுல் முன்பொருமுறை தம் பக்கம் யாரும் இல்லாத வேளையில் தாம் செய்த தற்காப்பு வாதத்தை நினைவுகூர்ந்தார் (2 தீமோ. 1:15ஐக் காணவும்). ஒநேசிப்போரு (1:16) மற்றும் லூக்கா (4:11) ஆகியோர் பவுலுக்கு அதிகம் மதிப்புடையவர்களாய் இருந்தனர் என்பதில் வியப்பெதுவுமில்லை. தீமோத்தேயு(வும்) அவ்வகையான நண்பரும் உடன் ஊழியருமாய் இருந்தார் என்று பவுல் நம்பினார் மற்றும் அவர் (தீமோத்தேயு) தம் பக்கமாய் விரைவில் வரும்படியாக அவர் ஏக்கம் கொண்டார்.

தீமோத்தேயு (தக்க) வேளையில் அங்கு வந்து சேர்ந்தாரோ இல்லையோ, பவுல் (தம்) சிந்தையில் வளமூட்டும் சமாதானத்தைக் கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட நடத்துதலின் ("... அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக"; 4:16) அவரது ஆவியானது பற்றிக் கொள்ள வனப்பு மிக்கதாக உள்ளது! அவரது அப்போதய துன்பத்தில் அவருக்கு நம்பிக்கையைக் கடனளிப்பதற்காக அவரது விசுவாசம் முன்னும் பின்னும் அசைவாடியதால் அவர் மனிதர்களுக்கெதிராக நிற்க முடிந்தது. இந்த சத்தியத்தைத் தவறாக எண்ணாதீர்கள். இயேசுவும் ஸ்தேவானும் செய்தது போல, நீங்கள் உங்களுக்குத் தீங்கிழைக்கும் விரோதியைக் கூட மன்னிக்க முடியும் பொழுது, நீங்கள் பிசாசின் பலம் பொருந்திய வலிவை, தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக வெற்றியை நிச்சயப்படுத்தும் ஒரு தெய்வீக ஆவியைக் கொண்டு வெற்றி கொண்டிருக் கிறீர்கள் என்றாகின்றது (மாற். 15:39ஐக் காணவும்).

*(3) ''மனிதர்கள் உங்களைக் கைவிடும் பொழுது, கர்த்தரைச் சார்ந்திருங்கள், அவர் என் பக்கமாய் நின்றிருந்தது போல உங்கள் பக்கமாய் நிற்பார்" (4:17, 18ஐக் காணவும்).* பவுல் தாம் எதிர் நின்றிருந்தது போன்ற வேளைகளில் தீமோத்தேயு, பிரசங்கித்தலுக்குத் தனது முன் மாதிரியைக் கவனிக்கும்படி விரும்பினார்.

"முழுமையாகப் பிரசங்கி." பவுல் "கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று ... என்னைப் பலப்படுத்தினார்"[42] என்று கூறினார் (4:17). அவர், தமது பலம் கர்த்தருடைய பிரசன்னத்தில் (மத். 28:20) இருந்தும் அவருடைய வல்லமையில் (பிலி. 4:13; எபே. 3:20, 21) இருந்தும் வந்தது என்று ஒப்புக் கொண்டார். கிறிஸ்தவர்கள் கர்த்தரால் பலப்படுத்தப்படும் பொழுது வியப்புக்குரிய விளைவுகள் பின் தொடருகின்றன.

வசனம் 17, "... என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும் ..." என்று தொடர்கின்றது. பவுல் இதற்கு முன்பு தாம் தீமோத்தேயுவை என்ன செய்யும்படி கேட்டுக் கொண்டிருந்தாரோ, அதைத் தாமே செய்திருந்ததாக உறுதிப்படுத்தினார் (4:5). அவர் தம் ஊழியத்தை நிறைவேற்றியிருந்தார். "நிறைவேற்றுதல்" என்பதற்கான அதே கிரேக்க மூல வார்த்தையானது வசனம் 5 (plerophoreso) மற்றும் வசனம் 17 (plerophorethe) ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"எல்லாரும் கேட்கும்படியாக - அல்லது நீங்கள் யாருக்காக அனுப்பப் பட்டீர்களோ அவர்களுக்காக பிரசங்கியுங்கள்" (அப். 9:15, 16; 22:14, 15; 26:16-18, 22, 23; 19:10; ரோமர் 15:18-21; கொலோ. 1:23; மாற். 16:15, 16 ஆகியவற்றைக் காணவும்). அவர், "... புறஜாதியார் எல்லாரும் கேட்கிறதற் காகவும்" என்று கூறினார்.

"நீங்கள் விடுவிக்கப்படும்படியாகப் பிரசங்கியுங்கள்." பவுல் "நான் விடுவிக்கப்பட்டேன்" என்று உறுதிப்படுத்தினார்.

<u>நமது விடுவிப்பு</u>

| | |
|---|---|
| கர்த்தர் | "சிங்கத்தின் வாயிலிருந்தும்"[43] (வ. 17) |
| நம்மை | "எல்லாத் தீமையினின்றும்" (வ. 18) |
| இவற்றினின்று | |
| விடுவிப்பார் | "தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி" (வ. 18) |

அவர், "... அவருக்குச் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக; ஆமென்" என்று முடித்தார்.

நாம் சிலரை அக்கினியிலிருந்து இழுத்து விட வேண்டும் என்று யூதா 23ல் யூதா வற்புறுத்திய பொழுது, அவர் அப்போஸ்தலரான பவுலிடத்தில் கர்த்தர் கேட்டதைப் பார்க்கிலும் அதிகமானதைக் கேட்கவில்லை! கர்த்தர் தம்முடையவர்களைப் பராமரிக்கிறார், மற்றும் பவுல் தமது சொந்தத் துன்ப வேளையில் இருந்து இதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார்!

## முடிவில் விளக்கங்கள் (வ. 19-22)

இப்பொழுது நாம் இந்த நிருபத்தில் உபதேச வேண்டுகோள்களோ அல்லது அறிவித்தல்களோ கொண்டிராத பகுதிக்கு வருகிறோம், பெரும் பாலும் நாம், இவ்வசனங்களில் கற்பதற்குப் பாடங்கள் எதுவும் இல்லை யென்று நினைத்து நமது படிப்பில் இவற்றைக் கடந்து சென்று விடுவதுண்டு.

*(ஆனால்) தேவன் இவ்வசனங்களில் மதிப்புள்ள தன்மையைக் கண்டார் என்பது நிச்சயம், அவ்வாறு இல்லையென்றால், அவர் தம்முடைய உடன்படிக்கையில் இவற்றை உள்ளடக்கும்படி ஆவியானவரை அனுமதித்திருக்க மாட்டார். முடிவு விளக்கங்கள் முக்கியமாக பிரசித்திப் பெற்றவர்களையும், பவுலின் தனிப்பட்ட விருப்பங்களையும் எடுத்துரைக்கின்றன.*

*வசனங்கள் 19, 20ல் பவுல் குறிப்பிட்ட பிரசித்திப் பெற்றவர்களை நாம் காண்போம்:*

*பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் பவுலின் கடந்த கால ஊழியத்தில் இருந்து அவருக்கு மிகவும் அன்பார்ந்தவர்களாய் இருந்தனர் (அப். 18:2, 18, 26; ரோமர் 16:3; 1 கொரி. 16:19). பவுல் அவர்களுடன் வாழ்ந்திருந்து, அவர்களுடன் ஊழியம் செய்து, அவர்களை நேசித்திருந்தார். அவர்கள் அவரது பிராணனுக்காகக் கழுத்தைக் கொடுத்தவர்களாய் இருந்தார்கள் (ரோமர் 16:3, 4).*

*ஒநேசிப்போரு பவுலுக்கு மதிப்புமிக்க இன்னொருவராய் இருந்தார். அவர், பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்த வேளையில் அவரைத் தேடி கண்டு பிடித்து "இளைப்பாறுதல்" அளித்தவராய்[44] இருந்தார். மற்றும் அவர் அங்கும், எபேசுவிலும் கூட மதிப்புமிக்க ஊழியங்களைச் செய்திருந்தார்.*

*எரஸ்து தீமோத்தேயுவுடன் பயணம் செய்திருந்தார் (அப். 19:22). அவ்வேளையில் எரஸ்து எங்கு ஊழியம் செய்தார் என்பதைத் தீமோத்தேயு அறிய விரும்புவார் என்று பவுல் அறிந்திருந்தார். எரஸ்து கொரிந்துவில் இருந்தார் என்பதைப் பவுலிடம் சிந்தனை நிறைதன்மையினால் நாம் அறிகிறோம் (4:20). இந்தச் சிறு சைகையானது, நாம் செய்தித் தொடர்பின் மூலமாக ஒருவர் மற்றவருக்குப் பக்திவிருத்தியூட்டி உற்சாகப்படுத்த முடியும் என்பதை விவரிக்கின்றது.*

*துரோப்பீமுவும் கூட தீமோத்தேயுடனும் பவுலுடனும் பயணம் செய்திருந்தார் (அப். 20:4, 5), மற்றும் அவர் எபேசுவில் உள் நோக்கமெதுவும் இல்லாத வகையில் பவுல் சில தொந்தரவுக்கு ஆளாகக் காரணமாயிருந்தார் (அப். 21:29). அவர் வியாதிப்பட்டிருந்தபடியால் (பவுலுடன் பயணப்படுவதிலிருந்து நின்று) மிலேத்துவில் தங்கி விட்டார். இது துரோப்பீமு ஏன் ரோமாபுரியில் இருந்து வாழ்த்துகள் அனுப்பவில்லை என்பதை விளக்குவதாயிருக்கும்.*

*ஊழியத்தில் உள்ள கர்த்தரின் மக்கள் சுகவீனத்தை எதிர்கொள்ளலாம் (2 இரா. 13:14; 20:1; கலா. 4:13; பிலி. 2:25-27; 1 தீமோ. 5:23ஐக் காணவும்), ஆனால் இது கர்த்தருடைய ஊழியத்தையோ அல்லது கட்டளையையோ இடையில் கலைத்துப் போடும்படியான பயத்தை தேவனுடைய மக்களில் உண்டாக்கக் காரணமாகக் கூடாது. அவர் நம்முடன் இருப்பார் மற்றும் அவர் நம்மை "எல்லாத் தீமையினின்றும்" விடுவிப்பார் (4:18). ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக, அபிலைன் கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த ஒரு இளம் சகோதரி கர்த்தருக்காக ஊழியம் செய்யும் பயணமாக ரஷ்யாவுக்குச் சென்றிருக்கையில் ஏறக்குறைய இறந்து போன நிலைக்கு ஆளானார்கள். அவர்கள் சுகமடைவதற்குப் போதுமான மருந்துகளும் சிகிச்சையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டதுமின்றி, அடுத்த ஆண்டில்*

*அவர்கள் அதே ஊழியக் களகத்திற்கு கர்த்தருக்காக மீண்டும் உழைக்க வந்தார்கள். அவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கின்றதால் (மத். 28:20), நாம் எப்பொழுதும் அவருக்காகச் செல்லத் தயாராய் இருக்க முடியும் மற்றும் இருக்க வேண்டும்!*

ஐபூலு நிச்சயமாக தீமோத்தேயுவுக்குத் தெரிந்தவராய் இருக்க வேண்டும், ஆனால் அவர் இவ்வசனம் தவிர மற்றபடி நமக்கு அறியப்படாத வராய் உள்ளார்.

வரலாற்றின்படி புதேஞ்சு என்பவர் பேதுருவினால் மனம் மாற்றப் பட்ட ஒரு ரோம அவையினராக இருந்தார்.[45]

ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய(வரலாற்றின்)த்தின்படி லீனு என்பவர் பிற்பாடு ரோமாபுரி(கிறிஸ்துவின் சபை)யில் ஒரு மூப்பராக ஆனார்,[46] ஆனால் இது உண்மை நிறைந்தது என்றுள்ளது என்பதைக் குறித்துப் பலர் ஐயப்படுகின்றனர். இவரது பெயர் கத்தோலிக்கப் (போப்புகளின்) பட்டியலில் காணப்பட்டாலும் இவர் ''போப்பாக'' இருந்ததற்கான நிரூபணம் எதுவுமில்லை என்பது உறுதி.

கலவுதியாள் என்ற பெண்மணி லீனுவின் தாயாய் இருந்ததாக அறிக்கை தரப்படுகின்றது.[47]

இந்த வேளையில் பவுலின் தனிப்பட்ட விருப்பங்கள் மும்மடங்கான வைகளாய் இருந்தன:

(1) ''மாரிக்காலத்துக்கு முன் நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு'' (4:21). அக்டோபர் முதல் ஏப்ரல் வரை மத்தியத் தரைக் கடலில் பயணம் செய்வது மிகவும் அபாயமானதாகும் என்பதைப் பவுல் தனது அனுபவத் தினால் அறிந்திருந்தார் (அப். 27ஐக் காணவும்). பலர் இதை முயற்சி செய்யா திருந்தார்கள். கடற் பயணங்கள் நின்று போயின. தாமதம் ஏதேனும் ஏற்பட்டால் பவுல் பூமியில் தாம் ஒருபோதும் தீமோத்தேயுவின் முகத்தை மீண்டும் ஒருக்காலும் காண முடியாது என்று அது அர்த்தப்படும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார் (1:3, 4ஐக் காணவும்). மேலும், குளிர்காலம்/ மாரிக்காலம் நெருங்கி வந்த வேளையில், அவர் தம் மேலங்கியானது சிறையில் தமக்கு அதிகமாய்ப் பயன்படும் என்றும் அறிந்திருந்தார் (4:13).

''மாரிக்காலத்துக்கு முன்பு வா'' என்ற தலைப்புடன் பல பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன, இவைகள் மக்களை, அன்பான ஒருவரை வாழ்த்த, ஒரு தவறைத் திருத்த, ஒரு பரிசை அனுப்ப, ஒருவரின் தேவையில் அவருக்கு உதவ, ஒரு சலுகையைத் திருப்பியளிக்க, சில ஆத்துமாக்களை மன்னிக்க, இழந்து போகப்பட்ட சில ஆத்துமாக்களைத் தேட, இன்னொரு வருக்காக உங்கள் இருதயத்தில் உள்ள அன்பை அறிவிக்க அல்லது தேவை களில் செய்யப்பட வேண்டிய வேறு சில செய்கைகளைச் செய்ய புத்திமதி கூறுகின்றன! நாளை என்பது மிகவும் தாமதமானதாகி விடலாம்!

*தீமோத்தேயு தாமதித்திராதிருந்தார் என்று நாம் யாவரும் மென்மை யான அக்கறையுடன் நம்பிக்கை கொண்டிருப்பதில்லையா? அவர் - மாரிக்காலத்துக்கு முன்பு - பவுலை அடைந்து அவரது வேண்டுகோள்கள் யாவற்றையும் நிறைவேற்றினார் என்று நினைக்க(வே) நாம் விரும்புவோம்.*

(2) ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன் ஆவியுடனே கூட

இருப்பாராக ...” (4:22; 1:7ஐக் காணவும்). பவுல் தீமோத்தேயுவிடம், “நீ கர்த்தரைப் போல உனக்குள் சிந்தனை கொண்டிருந்தாயென்றால், இந்த ‘பிரியாவிடை உரையில்’ உள்ளடக்கப்பட்ட வேண்டுகோள்களையும் நோக்கங்களையும் முழுமையாகச் செய்!” என்று கூறினார்.

(3) “கிருபை உங்களோடிருப்பதாக.” அவர் தமக்கும் தீமோத்தேயுவுக்கும் தாங்கள் பலவீனமாய் இருக்கும் பொழுதும் கூட, பலமுள்ளவர்களாய் இருக்க முடிவதற்கு கிருபை போதுமானதாயிருக்கும் என்று அறிந்திருந்தார் (எபே. 6:10-13).

## தொகுப்புரையில்

தனிச் சிறப்பு வாய்ந்த இந்த நிருபமானது இவ்விதமாய், உணர்வுகளால் முற்றிலும் சாரமாக்கப்பட்ட, தனிப்பட்ட வேண்டுகோள்களால் துடிக்க வைக்கப்பட்ட, மற்றும் விசுவாசத்திற்காகவும் தேவ நம்பிக்கைக்காகவும் கட்டளைகள் இடைப் பின்னப்பட்ட வகையில் முடிவடைகின்றது. ஆல்பெர்ட் பார்ன்ஸ் அவர்கள் பின்வருமாறு உரைத்தார்:

> இது ஊழிய வாழ்வில் அப்பொழுதுதான் பிரவேசித்த நிலையில் உள்ள ஒரு நபருக்கு, அப்போஸ்தலர்களில் மிகவும் புகழ்பெற்ற ஒருவரின் மரண கால ஆலோசனைகள் என்று கருதப்படலாம். மாபெரும் நன்மை வாய்ந்த இந்நிருபத்தின் கடைசி வார்த்தை வரைக்கும் நாம் இதை வாசிக்க வேண்டும் ... அவர் (பவுல்) தமது விருப்பங்களை வெளிப்படுத்த சிறிது கால அவகாசமே கொண்டிருந்த வேளையில், அவர் தமது இருதயத்திற்கு மிகவும் அண்மையிலிருந்த மற்றும் அவர் மிகவும் முக்கியமானதாய்க் கருதியிருந்த தலைப்புக்களைத் தேர்ந்தெடுத்திருப்பார் என்பதை நாம் உணருகின்றோம். இப்படிப்பட்ட ஒரு மனிதரின் பாதத்தினருகில் அமர்ந்து, அவருடைய பிரியாவிடை ஆலோசனைகளைக் கவனிப்பதைக் காட்டிலும் அதிக ஆர்வமிக்க வேறெந்த நிலைப்பாட்டிலும் நாம் அமர்த்தப்பட முடியாது. ஆகையால், சுவிசேஷத்தின் இளம் ஊழியர் ஒருவருக்கு இந்த நிருபமானது விலைமதிப்பற்றதாக உள்ளது; யாருக்கும் மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், இது புறஜாதியாருக்கான அப்போஸ்தலரின் கடைசி வார்த்தைகள் வரைக்கும் கவனிக்க ஆர்வமுள்ளதாகவும், அவர் தமது திறமைகளையும் வாழ்வு முழுவதையுமே கூட அர்ப்பணித்து அறிவிப்பில் ஈடுபட்ட அந்த மதத்திற்குச் சாதகமாக எழுதப்பட்ட அவரது கடைசி சாட்சியத்தை ஆழ்ந்து சிந்திக்கச் செய்வதாகவும் உள்ள விஷயமாய் இருப்பதில் இது தவற முடியாது.[48]

ஆகவே, இங்கு எழுதப்பட்டவை மட்டுமின்றி இதை எழுதியவரும் தனிச் சிறப்புக்குரியவராய் இருக்கிறார். அவர் தாம் கிறிஸ்துவைப் பின்பற்றியது போல, நாம் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் நமக்குக் கூறியதில் வியப்பெதுவும் இல்லை (1 கொரி. 11:1). வெறுமையான கொல்கொதாவை இயேசு மகிமையால் ஒளி வீசச் செய்தது போலவே, ரோமாபுரியில் இருந்த இருளான ஒரு சிறைச் சாலையைப் பவுல், நம்பிக்கை,

*தைரியம் மற்றும் வெற்றி ஆகியவற்றின் கொண்டாட்ட அறையாக மாற்றினார்!*

பரிசுத்தமான இருதயத்துடனும், கிறிஸ்தவர்களுக்கு ஏவப்பட்ட செய்தியுடனும் தீமோத்தேயுவுக்கு இந்த நிருபத்தை எழுதி முடித்த பவுல் தேவபக்தியான வாழ்வின் துன்பங்கள் மற்றும் சோதனைகளின் மத்தியில் தைரியமிக்க உறுதிப்பாட்டிற்காக வேண்டுகோள் விடுத்தார். அவரது மாபெரும் வாழ்வு அவரது எழுது கோலினால் நிழலிடப்பட்டு, எதிரொலிக்கும் உதாரணத்துடன் ஒவ்வொரு வரியையும் அடிக்கோடு இடுகின்றது!

---

குறிப்புகள்:

[1]*பிரசன்னம்* (Gk.: *epiphaneia*) - *"ரோமப் பேரரசரின் தொடர்பாகப் பயன் படுத்தப்பட்ட ஒரு சொற்றொடர். பேரரசின் அரியணைக்கு அவர் ஏறிச் செல்லுதல் என்பது அவரது epiphaneia (பிரசன்னமாக) இருந்தது; மற்றும் குறிப்பாக - இதுவே இவ்விடத்தில் பவுலின் சிந்தனைக்கான பின்னணியாக உள்ளது - இது பேரரசர் ஏதேனும் மாகாணத்திற்கோ அல்லது நகரத்திற்கோ விஜயம் செய்வதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது"* (William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series, rev. ed. [Philadelphia: Westminster Press, 1960], 233. [2]Ibid. [3]Alfred Marshall, *The R.S.V. Interlinear Greek-English New Testament* (Grand Rapids, Mich.: Zondervan, 1970), 842. [4]*பிரசங்கித்தல்* (Gk.: *keroxon*) - *"அறிவிப்பாளனாக அல்லது வெளிப்படையாய்க் கூவுபவனாக இருத்தல் ... வெளிப்படையாக அறிவித்தல், வெளியிடுதல் ... மத். 10:27 ... லூக் 12:3; அப். 10:42 ...* [*விசேஷமாக*] *மத சத்தியத்தைப் பிரசங்கித்தல், சுவிசேஷத்தை அதன் சிலாக்கியங்கள் மற்றும் வேண்டுகோள்களுடன் பிரசங்கித்தல் ... 1 பேது. 3:19 ... அப். 20:35; 28:31 ... 1 கொரி. 9:27 ... கொலோ. 1:23 ... 2 தீமோ. 4:2"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 398-99). [5]*தயாராயிருத்தல்* (Gk.: *epistethi*) - *"உறுதியாய் நிற்குதல் ... உடனடியாக, வலிவார்ந்த நிலையில், ஊக்கமாய் இருத்தல் ... கைக்கெட்டிய நிலையில் இருத்தல் ... 2 தீமோ. 4:6"* (Robinson, 310). [6]*கடிந்து கொள்ளுதல்* (Gk.: *elegxon*) - *"வெளிச்சத்துக்குக் கொண்டுவருதல், வெளிப்படுத்துதல், தீத்து 2:15 ... செயல்விளக்கப்படுத்துதல், நிரூபித்தல் ... யாரேனும் ஒருவரைக் குற்றம் உணர்த்துதல் அல்லது இணங்கச் செய்தல் ... திருத்துதல் ... 2 தீமோ. 4:2 ..."* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 248-49). [7]*கண்டனம் பண்ணுதல்* (Gk.: *epitimeson*) - *"கண்டனம் பண்ணுதல், கண்டித்தல், கண்டிப்பாய்ப் பேசுதல், ஒரு செயலைத் தடை செய்யும் வகையில் எச்சரித்தல் ... மத். 12:16; 16:20; 20:31. லூக். 18:39 ... தண்டித்தல்"* (Arndt and Gingrich, 303); *"... நியாயந்தீர்த்தல், பலன் அளித்தல் ... தகுதி வாய்ந்த தண்டனையில் கருத்தில் ... தவறுக்கு தண்டம் விதித்தல், விலைமதிப்பிடல், கண்டித்தல், கட்டளையிடுதல் ... மத். 16:22 ... மாற். 8:30"* (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 245). [8]*புத்தி சொல்லு* (Gk.: *parakaleson*) - *"ஒருவரின் பக்கத்திற்கு அழைத்தல் ... அழைத்தல் ... யாரேனும் ஒருவரை ... அழைப்பித்தல் ... வேண்டுகோள் விடுத்தல், வற்புறுத்துதல், புத்தி*

*கூறுதல், உற்சாகமூட்டுதல் ... 2 கொரி. 5:20 ... 1 தீமோ. 2:1 ... 2 தீமோ. 4:2; தீத்து 1:9; எபி. 10:25; 1 பேது. 5:12 ...”* (Arndt and Gingrich, 622-23). [9]*பொறுத்தல்* (Gk.: *anechomai அல்லது enecho*) - *“சகித்தல், உடன் தாங்கியிருத்தல் ... நீங்கள் சகிக்கின்ற சோதனைகள் ... 2 தெச. 1:4 ...* நாம் துன்புறுத்தப்படும் பொழுது அதை நாம் சகிக்கின்றோம், *1 கொரி. 4:12 ... அதை நீங்கள் மிகவும் அமைதியாய்த் தாங்குகின்றீர்கள், 2 கொரி. 11:4 ... சகித்தல், மனப்பூர்வமாய்க் கேட்டல் அல்லது கவனித்தல்* என்ற கருத்தில், *... எபி. 13:22 ... 2 தீமோ. 4:3 ...* ஒரு புகாரை/முறையீட்டை ஏற்றுக் கொள்ளுதல் *... அப். 18:14”* (Arndt and Gingrich, 65). [10]சேர்த்துக் கொள்ளுதல் (Gk.: *episoreuo*) - *“குவித்தல், குவியங்களில் சேர்த்தல், ...* அதிகமான எண்ணிக்கையில் போதகர்களைத் தங்களுக்கென்று தேர்ந்து கொண்டு அவர்களின் பின்னே ஓடுதல், *2 தீமோ. 4:3”* (Thayer, 244).

[11]Ronald A. Ward, *A Commentary on 1 and 2 Timothy & Titus* (Waco, Tex.: Word Books, 1974), 207. [12]*“இசை நாற்காலிகள்”* என்பது பிள்ளைகளுக்கான குழு விளையாட்டாகும், இதில் நாற்காலிகளின் வரிசையைச் சுற்றிப் பிள்ளைகள் அணிவகுத்துச் செல்வார்கள், அப்போது இசை இசைக்கப்படும். இசை நிறுத்தப்படும் பொழுது, எல்லாப் பிள்ளைகளும் நாற்காலிகளில் உட்காருவதற்குப் போட்டி போட்டுச் செல்வார்கள். எல்லா நாற்காலிகளிலும் பிள்ளைகள் அமர்ந்த பிறகு, எந்த பிள்ளைக்கு நாற்காலி கிடைக்கவில்லையோ, அது போட்டியில் இருந்து விலக்கப்படும். *(பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனையோ அதற்கு ஒன்று குறைவாக நாற்காலிகள் போடப்பட்டிருக்கும்).* “இசை நாற்காலிகள் *விளையாடுதல்”* என்பது இடங்களை மாற்றுதலுக்கான ஒரு மரபுச் சொற்றொடராக ஆகியுள்ளது. [13]திணவு (Gk.: *knetho*) - இங்குள்ள இடைநிலை வினைச் சொல்லானது விருப்பத்தை முக்கியத்துவப்படுத்துகின்றது. இதை அவர்கள் தங்கள் சொந்த *காதுகளின் திணவுக்கு ஏற்ப வடிவமைத்துக் கொள்ளுகின்றனர். இது முழுக்க முழுக்க சுயநலமுள்ளதாக இருக்கின்றது! Knetho* என்றால் “சொறிதல், சுகமூட்டுதல், அரிப்பை ஏற்படுத்துதல் *... சந்தோஷம் தரும் சில விஷயங்களைக் கேட்பதில் விருப்பம் என்று அர்த்தப்படுகின்றது ... 2 தீமோ. 4:3”* (Thayer, 351); “[உருவக *நடையில்,] தகவலின் ஆர்வத்திற்குரிய அல்லது காரசாரமான துணுக்குகளைக் கண்டறியும் ஆர்வம். இந்தத் திணவானது புதிய போதகர்களின் செய்திகளினால் தீர்த்து வைத்து விடுவிக்கப்படுகின்றது”* (Arndt and Gingrich, 438). [14]விட்டு விலகுதல் (Gk.: *apostrepho*) - *“எவரொவருவரிடத்தினின்றும் ஏதொன் றையும் நீக்குதல்,* ரோமர் *11:26 ... எவரொருவரிடத்திலும் உள்ள பற்றுறுதியிலிருந்து நீங்கி அவரை விட்டு விலகுதல், விலகிச் செல்லும்படியாகச் சோதிக்கப்படுதல் ... லூக். 23:14 ... தீத்து 1:14;* கை விட்டுவிடுதலின் கருத்தில் *... 2 தீமோ. 1:15”* (Thayer, 68). [15]கட்டுக்கதை (Gk.: *muthos*) - ஒரு *“புராணக் கதை, ... புத்திசாலித்தனமாய்ப் புனைந்துரைக்கப்பட்ட கதைகள், 2 பேது. 1:16 ... தீத்து 1:14 ... உலகப் பிரகாரமான கிழவிகளின் கதைகள், 1 தீமோ. 4:7”* (Arndt and Gingrich, 530-31); *“... கதை ... ஒரு கண்டு பிடிப்பு, தவறான தன்மை ... 1 தீமோ. 1:4; 4:7; 2 தீமோ. 4:4; தீத்து 1:14”* (Thayer, 419). [16]திரும்புதல் (Gk.: *esontai*) - *செயப்பாட்டு வினையானது, மக்கள் சில வெளி ஆதார மூலங்களிலிருந்து இது தங்களுக்கு நடைபெற அனுமதிக்கின்றனர் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. நோக்கமற்ற விலங்குகளைப் போல, அவர்களுக்கு அழைப்பு வந்தது, மற்றும் அவர்கள் எஜமானருடைய செய்திக்கு மாறாக ஒரு கட்டுக் கதையினால் மயக்கப்படும்படி தங்களை அனுமதித்தனர்! Ektrepo என்பது: “திரும்புதல் அல்லது முறுக்கிக் கொள்ளுதல் ... இடம் மாற்றுதல் ... இணைப் பிலிருந்து வெளியேறும்படி இடுதல் ... வழி விலகிச் செல்லுதல் ... 1 தீமோ. 1:6 ... 2 தீமோ. 4:4 ... இன்னொருவரைப் பின்பற்றும்படி விலகிச் செல்லுதல், 1 தீமோ. 5:15”* (Thayer, 200).

[17]*மனத்தெளிவுடன் இருத்தல்* (*nephe*) - *இவ்வசனத்தில் தெரிவுகள் எதுவும் இருப்பதில்லை ஒவ்வொரு படிநிலையும் உண்மையுள்ள சுவிசேஷ ஊழியருக்கு அவசியமானதாக உள்ளது. Nepho* என்ற சொற்றொடரானது "*தெளிவுடன் இருத்தல் … ஆவியில் அமைதியுடனும் ஒருங்கிணைந்த நிலையிலும் இருத்தல் என்று அர்த்தப்படுகின்றது; இச்சையடக்கத்துடன் இருத்தல், உணர்வுகளால் பாதிக்கப் படாத நிலை, எச்சரிக்கையான நிலை: 1 தெச. 5:6, 8; 2 தீமோ. 4:5; 1 பேது. 1:13; 5:8*" (Thayer, 425); "*… எல்லா உணர்வுகள், அவசரத் தன்மை, குழப்பம் ஆகிய வற்றிலுமிருந்து விடுதலையாகியிருத்தல் … நன்கு சமானப்பட்ட நிலையில், சுயகட்டுப்பாட்டுடன் இருத்தல் … சுயகட்டுப்பாட்டை செயல்படுத்துதல், நீங்கள் ஜெபிக்க உதவுதல், 1 பேது. 4:7*" (Arndt and Gingrich, 540). [18]*தீங்கநுபவி* (Gk.: *kakopatheson*) - "*துரதிர்ஷ்டத்தை அநுபவித்தல் … சிரமங்களை பொறுமையுடன் சுமத்தல் … 2 தீமோ. 4:5*" (Arndt and Gingrich, 398); "*… தீமைகளை (சிரமங்கள், தொந்தரவுகள்)ப் பாடாய் அநுபவித்தல் (சகித்தல்); துன்புறுத்தப்படுதல்; 2 தீமோ. 2:9; யாக். 5:13; 2 தீமோ. 2:3*" (Thayer, 320). [19]*சுவிசேஷகன்* (Gk.: *euaggelistes*) - "*… சுவிசேஷத்தின் பிரசங்கியார், எபே. 4:11 … அப். 21:8 … 2 தீமோ. 4:5*" (Arndt and Gingrich, 318). [20]Ward, 209.

[21]*நிறைவேற்று* (Gk.: *plerophoreson*) - "*முழுமையாய்ச் சுமத்தல் அல்லது வெளிக்கொண்டு வருதல் … ஒவ்வொரு அம்சத்திலும் ஊழியத்தை நிறைவேற்றுதல், 2 தீமோ. 4:5 … முழுமையாய் இணங்கியிருத்தல் அல்லது உறுதிப்பட்டிருத்தல்*" (Thayer, 517). [22]*வார்க்கப்படுதல்* (Gk.: *spendomai*) - *செயப்பாட்டு வினையானது இந்த இயக்கத்தைப் பவுல் தூண்டியிருக்கவில்லை என்று அறிவிக்கின்றது. இது வெளிப்புறத்து ஆதார மூலத்திலிருந்து, அவர் மீது வந்த செயலாய் இருந்தது. Speudo* என்றால் "*கொழுப்பு அல்லது பான பலியை அளித்தல் … பலி செலுத்தப்படக் கூடிய, பலியாகத் தனது இரத்தத்தைச் சிந்தக் கூடிய நிலையில் இருந்த அப்போஸ்தலர், 2 தீமோ. 4:6; பிலி. 2:17*" (Arndt and Gingrich, 769). [23]Barclay, 240. [24]*போராட்டம்* (Gk.: *agon*) - ஒரு "*விளையாட்டுப் போட்டி … எபி. 12:1 … போராடுதல், சண்டை … சுவிசேஷத்திற்காகப் பாடநுபவித்தல், பிலி. 1:30 மற்றும் அதன் ஊழியத்தில் துன்புறுதல் … ஒரு மாபெரும் அழுத்தத்தின் கீழ் அல்லது மாபெரும் எதிர்ப்பின் முகத்தில் இருத்தல், 1 தெச. 2:2 … 1 தீமோ. 6:12; 2 தீமோ. 4:7 … பராமரித்தல், அக்கறை … கொலோ. 2:1*" (Arndt and Gingrich, 14). [25]*வைக்கப்பட்டிருத்தல்* (Gk.: *apokeitai*) - "*தனிப்பட இடுதல், சேமிப்பில் வைத்தல் … யாரேனும் ஒருவருக்கென்று முன்பதிவு செய்யப்பட்டு அல்லது உறுதியாக்கப்பட்டு இருத்தல், ஒன்று குறிக்கப்பட்டு இருத்தல்*" (Arndt and Gingrich, 92). [26]*தந்தருளுதல்* (Gk.: *apodidomi*) - "*கொடுத்தல் … கொடுத்து விடுதல் … யாரேனும் ஒருவருக்கு தனது கடமைகளை ஒருவர் நிறைவேற்றுதல், 1 கொரி. 7:3 … தரவழைத்தல், தந்தருளுதல், மீண்டும் கட்டுதல் … மத். 6:4, 6, 18 … 2 தீமோ. 4:14, ரோமர் 12:17 … 1 தீமோ. 5:4*" (Arndt and Gingrich, 90); "*… செலுத்துதல், உரிய கடனை செலுத்திவிடுதல் … கைம்மாறு செய்தல், பதிலீடு செய்தல், நல்ல அல்லது தீய கருத்தில் … ரோமர் 2:6; 2 தீமோ. 4:8, 14; வெளி. 18:6; 22:12 …*" (Thayer, 60-61). [27]*நீதியுள்ள* (Gk.: *dekaios*) - "*தெய்வீக மற்றும் மனிதத்துவ சட்டங்களைக் கடைப்பிடிக்கும் பண்பு; ஒருவர் தாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருத்தல் … நேர்மை … உண்மை நெறி, தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தல் … ஒன்றுமறியாத் தன்மை, தவறற்ற தன்மை, குற்றமற்ற தன்மை … மத். 27:19, 24 … யோனா 1:14 … 1 பேது. 3:18; 1 யோவா. 2:1 … தேவனால் அங்கிகரிக்கப் பட்ட(வர்) … கிறிஸ்துவைப் பற்றியது, 2 தீமோ. 4:8 … 2 தெச. 1:5*" (Thayer, 148-49). [28]*சீக்கிரமாய்* (Gk.: *tacheos*) - "*உடனடியாக, தாமதமின்றி, விரைவாக 2 தீமோ. 4:9 … 1 தீமோ. 3:14; எபி. 13:23 … இயன்ற வரையில் விரைவாக …*

*அப். 17:15"* (Arndt and Gingrich, 814). *ஜாக்கிரதைப்படு என்பதுடன் "சீக்கிரமாய்" என்பதைக் கூட்டியதில் பவுல் தீமோத்தேயுவிடம் "துரிதமாகு" என்று அடிப்படையாகக் கூறினார்.* [29]*ஜாக்கிரதைப்படு* (Gk.: *spoudason*) - *"விரைவாக, அவசரப்படு ... அப். 20:16 ... இயன்ற வரை விரைவாய்ப் புறப்படு ... அப். 22:18 ..."* (Arndt and Gingrich, 769). *இந்தக் குறிப்பை அகராதிகள் spoudazo என்பதன் கீழ் தருகின்றன, இங்கு 2 தீமோ. 4:9, 21; தீத்து 3:12; கலா. 2:10; எபே. 4:3; 1 தெச. 2:17; 2 தீமோ. 2:15; முதலியனவும் பட்டியலிடப்பட்டுள்ளன* (Arndt and Gingrich, 771). *இங்குள்ள கட்டளைச் சொல்லானது ஒரு வேண்டுகோளாய் இருக்கலாம், ஆனால் இவ்வார்த்தையானது "தீமோத்தேயுவே, நீ வர வேண்டும்" என்ற மேற்குரலொலியைக் கொண்டுள்ளது.* [30]Barclay, 244.

[31]William Herdriksen, *A Commentary on 1 & 2 Timothy & Titus* (London: The Banner of Truth Trust, 1964), 320. [32]Ibid. [33]*பிரயோஜனமுள்ள* (Gk.: *euchrestos*) - *"பயன்படுத்தச் சுலபமாயிருத்தல், பயன் நிறைந்த தன்மை, ஆதாயமுள்ள தன்மை, 2 தீமோ. 2:21; 4:11; பிலே. 11"* (Robinson, 309). [34]*ஆறுதல்* (Gk.: *paraklesis*) - *"மன்றாடுதல், வேண்டுதல், உடன்படிக்கை/ஒப்பந்தம். 2 கொரி. 8:4 ... புத்திமதி கூறுதல், அறிவுரை கூறுதல், உற்சாக மூட்டுதல்; அப். 15:31 ... 1 கொரி. 14:3; 2 கொரி. 8:17; பிலி. 2:1; 1 தீமோ. 4:13; எபி. 12:5 ... 13:22 ... தேறுதல், ஆறுதல், ஊக்கம்: 2 கொரி. 1:4-7 ... நயந்து பேசும் உரையாடல், கிளர்ச்சியூட்டும் உரை ... வல்லமை நிறைந்த அறிவுறுத்தும் உரை: ரோமர் 12:8 ... அப். 18:15 ... போதித்தல், புத்தி கூறுதல், ஆறுதல்படுத்துதல் ஆகியவற்றில் வரம் பெற்ற மனிதர், அப். 4:36 ... 1 தெச. 2:3"* (Thayer, 483). [35]*புத்தகம்* (Gk.: *biblion*) - *ஒரு "சிறு புத்தகம் ... லூக். 4:17, 20; யோவா. 20:30; கலா. 3:10; 2 தீமோ. 4:13 ... எழுதப்பட்ட ஒரு பதிவேடு ... மத். 19:7 ... நித்திய மீட்புக்கென்று தேவன் நியமித்துள்ளவர்களின் பட்டியல்: வெளி. 13:8 ... 17:8; 20:12; 21:27"* (Thayer, 101-2). [36]*தோல் சுருள்* (Gk.: *membrana*) - *ஒரு "மெல்லிய ஜவ்வு, தோல், சுருள், 2 தீமோ. 4:13"* (Robinson, 450). [37]Barclay, 252. [38]*இந்த அலெக்சந்தர் யார் என்பது பற்றி வில்லியம் ஹென்ரிக்ஸென் பின்வருமாறு எழுதினார்: "இவரது பெயரானது இன்றைய நாட்களில் உள்ள செல்வராஜ், விஜயகுமார், பாபு அல்லது சேகர் போன்ற ஒரு பொதுவான பெயராகவே இருந்தது (மாற். 15:21; அப். 4:6; 19:33, 34; 1 தீமோ. 1:19, 20; 2 தீமோ. 4:14, அநேகமாக ஐந்து வெவ்வேறு அலெக்சந்தர்களாய் இருக்கலாம்). இந்த அலெக்சந்தர் ரோமாபுரியில் வாழ்பவர் என்று சந்தர்ப்பப் பொருளில் இருந்து தோன்றுகின்றது; ஏனெனில் ரோமாபுரியில் இருந்த அப்போஸ்தலரான பவுலுடன் இவர் எதிர்த்து நிற்க முடிந்திருந்ததால் இவர் அங்கிருந்தார் என்றெண்ணுவதே விசேஷித்த வகையில் ஏற்புடையதாக உள்ளது. இப்பொழுது, இந்தக் குறிப்பு சரியானதாய் இருக்கும் என்றால், இவர் 1 தீமோ. 1:20 அல்லது அப். 19:33, 34ல் குறிப்பிடப்படுகிற அலெக்சந்தர்களுடன் அடையாளப் படுத்தப்படக் கூடாது, ஏனெனில் இந்த அலெக்சந்தர்கள் எபேசுப் பகுதியில் வாழ்ந்தார்கள்"* (Hendriksen, 324). [39]*தீமை* (Gk.: *kakos*) - *"... மோசம் ... மோசமான இயல்புடைய ... சிந்தித்தல், உணர்தல், செயல்படுதல் வகைபற்றியது; இழிவான, தவறான, துன்மார்க்கமான ... மத். 21:41 ... பிலி. 3:2; வெளி. 2:2 ... கொலோ. 3:5 ... தீய ... சட்டத்திற்கு எதிரிடையான ... ரோமர் 1:30; 1 கொரி. 10:6; 1 தீமோ. 6:10 ... தொந்தரவுள்ள, தாக்குகின்ற/புண்படுத்துகின்ற, நாசமாக்குகின்ற, அழிக்கும் தன்மையுள்ள ... தீத்து 1:12"* (Thayer, 320). [40] *செய்தார்* (Gk.: *enedeixato*) - *"காட்ட, செயல்விளக்கப்படுத்த, நிரூபிக்க, தர்க்கத்தினால் அல்லது செய்கையால் ... ரோமர் 9:22 ... எபே. 2:7 ... தீத்து 2:10; 3:2; எபி. 6:11; ... 1 தீமோ. 1:16 ... விளங்கப் பண்ண, வெளிப்படுத்துதல் ... 2 தீமோ. 4:14; ஆதி. 1:15, 17"* (Thayer, 213).

[41]Hendriksen, 325. [42]*பலப்படுத்தினார்* (Gk.: *endunamoo*) - *"... பலமாக்குதல்,*

பலத்தை அளித்தல் ... பிலி. 4:13; 1 தீமோ. 1:12; 2 தீமோ. 4:17 ... செயப்பாட்டு வகையில், பலம் பெறுதல் ... பலத்தில் வளருதல்/அதிகரித்தல்; அப். 9:22 ... 2 தீமோ. 2:1 ... கர்த்தருடன் ஐக்கியத்தில்/ஒருமைப்பாட்டில் இருத்தல், எபே. 6:10" (Thayer, 214). [43]இவ்வசனத்தில் பவுலின் விளக்கங்களுடன் சங்கீதம் 22ஐ வில்லியம் பார்கலே. அவர்கள் ஒப்பிட்டார்: "இவ்வசனத்தில் சங்கீதம் 22ன் கடந்த கால நினைவுக் கூறுகள் பல இருப்பது இவ்வசனத்தைப் பற்றிய மிகவும் ஆர்வத்திற்குரிய விஷயங்களில் ஒன்றாகும்: 'ஏன் என்னைக் கை விட்டீர்?' 'எல்லா மனிதர்களும் என்னைக் கை விட்டார்கள்.' 'உதவுவதற்கு ஒருவரும் இல்லை.' 'என் பக்கம் நிற்க ஒருவரும் இல்லை.' 'சிங்கத்தின் வாயிலிருந்து என்னைத் தப்புவியும்.' 'நான் சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவிக்கப்பட்டேன்.' 'பூமியின் கடையாந்தரங்கள் யாவும் கர்த்தரிடமாய்த் திரும்பும்.' 'புறஜாதியார் கேட்கும்படிக்கு.' 'இராஜ்யம் கர்த்தருடையது.' 'அவர் தம் பரம ராஜ்யத்திற்காய் என்னை இரட்சிப்பார்.' இந்த சங்கீதத்தின் வசனங்கள் பவுலின் சிந்தையில் ஓடியிருக்கும் என்பது நிச்சயம். மற்றும் இயேசு சிலுவையில் தொங்கிய பொழுது அவருடைய சிந்தையிலும் இந்த சங்கீதம் இருந்தது என்பது மிகவும் விரும்பத் தக்க விஷயமாக உள்ளது, ஏனெனில் இந்த சங்கீதம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகின்றது: 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' மற்றும் இது வெற்றியில் முடிகின்றது (சங். 22:1; மத். 27:46). பவுல் மரணத்தை எதிர்கொண்டிருக்கையில், தமது கர்த்தர் செய்தது போலவே அதே சங்கீதத்தைக் கொண்டு தமது இருதயத்தை ஆறுதல்படுத்தி உற்சாகமூட்டிக் கொண்டார்" (Barclay, 253-54). [44]1, 2 தீமோத்தேயு & தீத்து வரிசை நூல்களில் ஒநேசிப்போரு பற்றி 2 தீமோ. 1:16-18ல் தரப்பட்டுள்ள குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும். [45]Hendriksen, 333. [46]Irenaeus *Against Heresies*, 3.3.3; Eusebius *Ecclesiastical History*, 3.4. [47]Hendriksen, 333. [48]Albert Barnes, *Notes on the Epistles of Paul to the Thessalonians, to Timothy, to Titus and to Philemon* (New York: Harper and Brothers, 1845), 237. [49]Barclay, 219-20.